## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 – 5 |
| 2 | பால்வளத் துறை | 5 – 14 |
| 3 | பால் கூட்டுறவுகளின் மூன்றடுக்கு முறை | 14 – 16 |
| 4 | தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் | 17 – 38 |
| 5 | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் | 38 – 50 |
| 6 | தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் | 50 – 54 |
| 7 | திட்டங்கள் | 55 – 68 |
| 8 | நடைமுறையில் உள்ள பெரும் திட்டங்கள் | 69 – 82 |
| 9 | பால் உற்பத்தியாளர்களுக்கான சிறப்பு சேவைகள் | 82 – 89 |
| 10 | பணியாளர் நலன் | 89 – 91 |
| 11 | பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை | 92 – 96 |
| 12 | முடிவுரை | 96 – 98 |


# பால்வளத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2016–2017

வேளாண்மைப்பிரிவின் ஓர் அங்கமாகவும், கிராமப்புற பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் ஒரு கருவியாகவும், பெண்களுக்கு சுயவேலை வாய்ப்பினை அளிக்கும் தொழிலாகவும் விளங்கிக்கொண்டிருக்கின்ற கால்நடை வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் இரண்டாம் வெண்மைப்புரட்சியை ஏற்படுத்தும் நோக்கோடு, கால்நடை பராமரிப்புத் துறைக்கும், பால்வளத் துறைக்கும் .....

முன் எப்போதும் இல்லாத அளவுக்கு எனது அரசால் முக்கியத்துவம் தரப்பட்டு கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

*–மாண்புமிகு முதலமைச்சர்*
*23.09.2015 அன்று*
*ஆற்றிய உரை*

## முன்னுரை

நாட்டின் பால்வளத்துறை வளர்ச்சியில், பால் கூட்டுறவுகள் ஒரு முக்கிய பங்கினை வகித்து வருகின்றன. பால் கூட்டுறவுகள் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் வேரூன்றிவிட்டதன் காரணமாக, இந்தியா பால் பற்றாக்குறை

நாடு என்ற நிலையிலிருந்து உலகின் அதிக பால் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாக மாறியுள்ளது. 2014–15ஆம் ஆண்டில் இந்தியா 146.313 மில்லியன் டன் பாலை உற்பத்தி செய்துள்ளது. இது உலக பால் உற்பத்தியில் 18.5 சதவீதமாகும். தமிழகம் நாளொன்றுக்கு 190 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியுடன் நாட்டின் அதிக பால் உற்பத்தி செய்யும் முதல் 10 மாநிலங்களில் இடம் பெற்றுள்ளது. தமிழகத்தின் அனைத்து மூலை முடுக்குகளிலும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுகள் பரவியுள்ளதால், பால் கூட்டுறவு அமைப்புக்களை மிக்க தாக்கம் கொண்டுள்ள மாநிலமாக தமிழகம் அமைந்துள்ளது. இம்மாநிலத்தில், 23.01 இலட்சம் பால் விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்ட 12,105 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பால் உற்பத்தியாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில், பால் கொள்முதல் விலை, தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மற்றும் மாநில இணையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளில் அதிக அளவிலான முதலீடு, பால் தொழில் மூலம் பால் உற்பத்தியாளர்கள் குடும்பங்களுக்கு ஒரு நிலையான



வருவாயை அளிக்கும் பொருட்டு, விலையில்லா கறவை பசுக்கள் வழங்குதல் போன்ற பல்வேறு வகையான முயற்சிகளை எடுத்துள்ளார்கள்.

கடந்த ஐந்தாண்டுகளில், பசும்பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.10/– உயர்த்தப்பட்டுள்ளது. இவ்விலை உயர்வு, பால் உற்பத்தியாளர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதன் மூலம் 2010–11ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 20.67 இலட்சம் லிட்டர் என்ற அளவில் இருந்த மாவட்ட கூட்டுறவு பால் ஒன்றியங்களின் பால் கொள்முதல் 2015–16ல் நாளொன்றுக்கு 28.97 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. நடப்பாண்டான 2016–17ல் ஏப்ரல் முதல் ஜுலை வரையிலான முதல் நான்கு மாதங்களில் நாளொன்றுக்கு 29.32 இலட்சம் லிட்டர் பால் சராசரியாக கொள்முதல் செய்யப்படுகிறது. 27.06.2016 அன்று இதுவரை இல்லாத அளவான 31.39 இலட்சம் லிட்டர் என்ற உச்ச அளவை எட்டி சாதனை படைத்துள்ளது. இந்த அதிகபட்ச அளவிலான பால் கொள்முதல் வாயிலாக, நாட்டின் பல்வேறு மாநில அளவிலான கூட்டுறவு அமைப்புகளில் ஆவின் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில், ஆவின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ரூ.593.65 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. திருவண்ணாமலை பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை, அம்பத்தூர் ஐஸ்கிரீம் மற்றும் பனீர் தயாரிக்கும் தொழிற்சாலை, பல்வேறு முக்கிய இடங்களில் அதிநவீன பாலகங்கள் அமைத்தல், கிராமப்புற பகுதிகளில் மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல், புதுக்கோட்டை பால்பண்ணை மற்றும் காக்களூர் பால்பண்ணை போன்ற பல புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதற்கும் கூடுதலாக தற்போதுள்ள பல பால்பண்ணைகளை நவீனப்படுத்துதல் மற்றும் விரிவாக்கம் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் விளைவாக, கடந்த ஐந்து ஆண்டுகளில், பால் குளிரூட்டும் வசதி நாளொன்றுக்கு 6.97 இலட்சம் லிட்டர் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், பால் பதனிடும் வசதி 8.35 இலட்சம் லிட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது. வெண்ணெய் குளிரூட்டும் வசதி 1,330 மெட்ரிக் டன் கூடுதலாகவும், கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் இருப்பு வைக்கும் வசதி 1,000 மெட்ரிக் டன் கூடுதலாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த உட்கட்டமைப்பு மேம்பாட்டு வசதிகளின் காரணமாக, தற்போது அதிகரித்து வரும் பால் கொள்முதலை கையாளமுடிகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் விலையில்லா கறவைப்பசுக்கள் வழங்கும்



திட்டத்தின் கீழ், 60,000 கறவைப்பசுக்கள் கிராமப்புற ஏழை, எளிய விவசாய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆவின் நிறுவனம், கால்நடை பராமரிப்புத்துறையுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பு கொண்டு இத்திட்டப்பயனாளிகளை பால் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக சேர்த்துக்கொண்டு, அப்பயனாளிகளிடமிருந்து பாலை கொள்முதல் செய்வதன் மூலம், அவர்களுக்கு முறையான மற்றும் நிலையான வருவாய் பெறுவதை உறுதி செய்கிறது.

## 2. பால்வளத்துறை

### 2.1. பால்வளத்துறையின் குறிக்கோள்கள்

- அமைப்புசாரா பால் உற்பத்தித் தொழிலை, ஒருங்கிணைந்த அமைப்புசார் தொழிலாக மாற்றத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- கூட்டுறவு பால்பண்ணைகளின் செயல்பாடுகளை கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்
- பாலின் தரத்தின் அடிப்படையில், பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்தல் மற்றும் கால்நடைகளின் பால் உற்பத்தியை அதிகரிக்கத் தரமான கால்நடை

இடுபொருட்கள் மற்றும் கால்நடைகளின் நலன் சார்ந்த சேவைகளை அளித்தல்

- தொலைதூர கிராமங்களில் பால் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதன் மூலம், தனியார் வியாபாரிகளின் சுரண்டல்களிலிருந்து பால் உற்பத்தியாளர்களை பாதுகாத்தல்

- இதர தொழில்களின் வளர்ச்சிக்கு நிகராக பால்பண்ணைத் தொழிலின் தொடர் வளர்ச்சியை உறுதி செய்தல்

- வறட்சி காலங்களிலும், கறவை மாடுகளுக்குத் தேவையான கலப்புத் தீவனம் மற்றும் பசுந்தீவனம் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்தல்

- உபரி பாலை கையாளத் தேவையான கிடங்கு, பதப்படுத்துதல் மற்றும் விற்பனை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

- நுகர்வோருக்குத் தரமான பால் நியாயமான விலையில் தொடர்ந்து கிடைக்கச் செய்தல்



- பால்பண்ணை செயல்பாடுகளில் நவீன தொழில்நுட்பங்களை புகுத்துதல்

- நிர்ணயிக்கப்பட்ட தரக்குறியீட்டுடன் சரியான அளவுகளில் பால் மற்றும் பால் பொருட்கள் கிடைக்கச் செய்தல்

- பால் மற்றும் பால்பொருட்களை சந்தைப்படுத்துதல்

**2.2. குறிக்கோள்களை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்**

பால்வளத்துறையின் குறிக்கோள்களை நிறைவேற்றிட கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- சுகாதாரமான, தூய்மையான பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோருக்கு கிடைக்கச் செய்தல்.

- ஒளிவு மறைவற்ற நிர்வாகத்திற்காக பால்பண்ணை செயல்பாடுகளை கணினி மயமாக்குதல்.

- கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள பால் உற்பத்தியாளர்களின் கறவைப் பசுக்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல், இலவச மருத்துவ சிகிச்சை, கால்நடைகளுக்கு காப்பீடு வசதி, சமச்சீர் கலப்புத்தீவனம், பசுந்தீவன வளர்ப்புக்கு விதை மற்றும் விதை கரணை போன்ற இடு பொருட்கள் வழங்குதல்

- கிராம அளவில் தூய பால் உற்பத்தித் திட்டத்தை தரப் பரிசோதனை மற்றும் தேவையான விரிவாக்கக் கல்வி வழங்குவதன் மூலம் பலப்படுத்துதல்

- மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துதல்

- பால் கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் பால்பண்ணைகளின் கையாளும் திறனை அதிகரித்தல் மற்றும் பலப்படுத்துதல்.

- புதிய பாலகங்கள், பால் விற்பனை மையங்கள், புதிய பால் வழித்தடங்கள், நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மாதாந்திர பால் அட்டை விற்பனை அதிகரித்தல்.



## 2.3. துறையின் நிர்வாக அமைப்பு

பால்வளத்துறை, பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையரை தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய நிர்வாக இயக்குநராகவும் செயல்பட்டு வருகிறார். 1958ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்துறை, சென்னை, மாதவரம் பால்பண்ணையை நிர்வாகத் தலைமையகமாகக் கொண்டுள்ளது. பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர், மாநிலத்தின் அனைத்து வகை பால் கூட்டுறவுகளுக்கும் செயல் பதிவாளராகவும் செயல்பட்டு வருகிறார். புதிய பால் கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்தல், செயலிழந்த சங்கங்களை புதுப்பித்தல், சங்கங்களை ஆய்வு செய்தல், தாவா பிரச்சனைகளை முடித்து வைத்தல், பால் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடத்துதல், பொது மக்களின் நலன் கருதி பால் கூட்டுறவு சங்கங்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குதல் போன்ற பல்வேறு தரப்பட்ட பணிகளுடன் 1983ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின்

விதிகள் கீழான சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இத்துறையில் மாவட்ட அளவில் நிர்வாக மற்றும் சட்டப்பூர்வ நடவடிக்கைகளை செயல்படுத்த பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் அவர்களின் சட்டப்பூர்வமான கூட்டுறவுப் பணிகளை நடைமுறைப்படுத்த, 29 துணைப் பதிவாளர்கள் (பால்வளம்) உள்ளனர். இந்த 29 அலுவலகங்களில், திருப்பூர், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், கரூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 அலுவலகங்களும் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் புதியதாக அமைக்கப்பட்டவையாகும்.

கூட்டுறவுத்துறையின் செயலமைப்பை அடிப்படையாகக் கொண்டு நிர்வாக வசதிகளுக்காக இத்துறையின் அமைச்சுப்பணியின் கீழ் அனுமதிக்கப்பட்ட கண்காணிப்பாளர் மற்றும் உதவியாளர் பதவிகள் சார்நிலை பணியின் கீழான கூட்டுறவு சார்பதிவாளர் மற்றும் இளநிலை ஆய்வாளர் பதவிகளாக பதவி உருமாற்றம் (conversion) செய்யப்பட்டுள்ளன. இத்துறையின் செயல்பாடுகளை மேலும் வலுவூட்டும் வகையில், இத்துறையில் இருந்த



காலிப்பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட்ட பணியிடங்களில் பால் வளத்துறையின் வரலாற்றிலேயே முதன்முறையாக ஒரே சமயத்தில் 137 முதுநிலை ஆய்வாளர் பணியிடங்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்பட்டுள்ளன.

**பால் சேகரிப்பு குழுக்கள்**

பால் கொள்முதல் பொதுவாக மாவட்ட ஒன்றியங்களால் மேற்கொள்ளப்படுகிறது. பால் கூட்டுறவு சங்கங்கள் அமையப் பெறாத இடங்களில், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களின் பால் கொள்முதல் பணியில் உதவிடும் பொருட்டு தர்மபுரி, சங்கரன்கோவில், தஞ்சாவூர், வேலூர், திருவள்ளூர், காரைக்குடி, பெரம்பலூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் இத்துறையின் கீழ் 8 பால் சேகரிப்பு குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த சேகரிப்புக்குழுக்கள், கிராமங்களில் உள்ள பால் உற்பத்தித்திறன் மற்றும் கூட்டுறவு அமைப்பின் கீழ் மேலும் பல கிராமங்களை கொண்டுவரும் வகையில், புதிய பால் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை அளவீடு செய்கின்றன.

**நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள்**

பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளை பராமரிப்பதில் உதவிடவும், கூட்டுறவு சங்க பால் உற்பத்தியாளர் கால்நடைகளுக்கு, இலவச கால்நடை சிகிச்சை வசதிகளை அளித்திடவும், திருநெல்வேலி, வள்ளியூர், சாத்தான்குளம், சங்கரன்கோவில், திருப்பத்தூர், காரைக்குடி, ராமநாதபுரம், விருதுநகர், சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள் இயங்கி வருகின்றன. இந்நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள் ஏற்கெனவே தொடர்புறுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி பால் கூட்டுறவு சங்கங்களுக்கு நேரில் சென்று சிகிச்சை அளிக்கின்றன.

**2.4. பால் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல்**

பால் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவதில் பால்வளத்துறை ஆணையர் மாநில தேர்தல் அலுவலராகவும், துணைப்பதிவாளர்கள் (பால்வளம்) மாவட்ட தேர்தல் அலுவலர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர். மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையத்தின் கீழ், 3 அடுக்கில் உள்ள அனைத்து வகை பால் கூட்டுறவு சங்கங்களுக்கும் 2013ஆம்



ஆண்டில் தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்கள், தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களில் 09.05.2013 அன்றும், மாவட்ட ஒன்றியங்களில் 11.06.2013 அன்றும் மற்றும் மாநில இணையத்தில் 17.07.2013 அன்றும் பொறுப்பேற்றுள்ளன.

புதிதாக பால் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்படும் போது, அச்சங்கங்களில் 6 மாத காலத்திற்குள் தேர்தல் நடத்தப்படுகின்றது. தேர்தெடுக்கப்பட்ட 1,09,891 நிர்வாகக்குழு உறுப்பினர்களில் 35,592 மகளிர் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தமிழகம் முழுவதிலுமான பால் கூட்டுறவுகளின் நிர்வாகத்தில் பங்கேற்பு செய்துள்ளதிலிருந்து, கூட்டுறவு அமைப்பில் ஜனநாயகத்துவம் முக்கியப்படுத்துவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**2.5. தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம்**

பால் நுகர்வோருக்குத் தரமான பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை உறுதிசெய்யும் வகையில், இத்துறையில் பால் மற்றும் பால் பொருட்களின் தரப்பரிசோதனைகள் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்காக, சென்னை மாதவரத்தில் பால் உற்பத்தி

மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் கட்டுப்பாட்டில் ஒரு தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. இது தவிர, சென்னையில் ஒரு நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகமும் இயங்கி வருகிறது. இந்த ஆய்வகத்தில், 2015–16ம் ஆண்டில் 604 பால் மாதிரிகள் பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மேலும், இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களும் தங்களது பால்பண்ணைகளில் தரக்கட்டுப்பாட்டு பிரிவுகளை ஏற்படுத்தி தகுதிவாய்ந்த தொழில்நுட்ப பணியாளர்களைக் கொண்டு செயல்படுத்தி வருகின்றன.

**3.பால் உற்பத்தியாளர் கூட்டுறவுகளின் மூன்றடுக்கு அமைப்பு**

அடுக்கு–1 – கிராம அளவில் – 'ஆனந்த் பாணி' மாதிரியில் கிராம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 3 அடுக்கு அமைப்பில் அடிப்படை நிலையில் அமையும் இச்சங்கங்கள், பால் உற்பத்தியாளர் உறுப்பினர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்து உள்ளூர் தேவைக்கேற்ப விற்பனை மேற்கொண்டபின், உபரி பாலை, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்




ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கின்றன. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கமானது பால் உற்பத்தியாளர்களுடன் நேரடி தொடர்பு கொண்டுள்ளது.

அடுக்கு–2– மாவட்ட அளவில் – மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், மாவட்ட அளவிலான மத்திய கூட்டுறவு சங்கங்களாகும். இதில் அனைத்து கிராம அளவிலான தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களும் உறுப்பினராக உள்ளன. இவை தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களிலிருந்து உபரி பாலை கொள்முதல் செய்து, பதப்படுத்தி, உள்ளூர் பால் நுகர்வோருக்கு விற்பனை செய்தது போக, உபரிபாலை சென்னை மாநகர பால்பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கின்றன. இதில், மேலும் ஒரு பகுதி பால், உபபொருட்கள் மற்றும் பால்பவுடராக உருமாற்றம் செய்யப்படுகிறது

அடுக்கு–3– மாநில அளவில் – மாநில அளவில் தலைமைச் சங்கமாகச் செயல்படும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் அனைத்து மாவட்ட ஒன்றியங்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை மாநகரத்தில் நேரடியாக பால் மற்றும் பால் உபபொருட்களை விற்பனை செய்வதோடு மட்டுமல்லாமல், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தயாரிக்கப்படும் பால் மற்றும் பால் பொருட்களை “ஆவின்'' என்ற வணிக பெயரில் சந்தையை ஏற்படுத்தி தருகிறது.






**4. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் 3 அடுக்கு பால் கூட்டுறவு அமைப்பில், மாநில அளவிலான ஒரு தலைமை சங்கமாகும். 01.02.1981ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இணையம் அதுவரை இயங்கி வந்த தமிழ்நாடு பால்வளம் நிறுவனத்தால் (TNDDC) மேற்கொள்ளப்பட்டு வந்த வணிக நடவடிக்கைகளான பால் கொள்முதல், பதனிடுதல், சிப்பம் கட்டுதல், நுகர்வோருக்கு பால் மற்றும் பால் உபபொருட்களை விற்பனை செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தலைமை அலுவலகங்கள் சென்னை மாதவரம் பால்பண்ணையில் உள்ள ஆவின் இல்லத்தில் அமைந்துள்ளன. இணையத்தின் ஒட்டுமொத்த நிர்வாக பணிகளை மேற்கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இணையத்தின் நிர்வாகக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிர்வாகக்குழு 17.07.2013 அன்று பொறுப்பேற்றுள்ளது. இணையத்தில், தினசரி நிர்வாக செயல்பாடுகள், இணைய நிர்வாக இயக்குநர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இணையம், பல்வேறு மாவட்ட ஒன்றியங்களிலிருந்து பால் கொள்முதல் செய்து, பதப்படுத்தி சென்னை மற்றும் புறநகர்

பகுதி பால் நுகர்வோருக்கு திரவப்பாலாகவும், பால் உபபொருட்களாகவும் அளிக்கின்றன. மேலும், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தயாரிக்கப்படும் பால் உபபொருட்களுக்கு ‘ஆவின்’ என்ற வணிக பெயரில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையையும் ஏற்படுத்தித் தருகிறது.

இணையம், மாவட்ட ஒன்றிய செயல்பாடுகளில் ஒருங்கிணைப்பு மேற்கொள்வதோடு, தேவைப்படும் நேரங்களில் அவற்றிற்கு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. மேலும் பால்வள ஆணையர் மூலம், பல்வேறு தரப்பட்ட திட்டங்கள் மூலம் அரசு நிதியுதவி பெறத் தேவையான திட்ட முன்மொழிவுகளை தயார் செய்கிறது. மேலும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய திட்டப்பணிகள் இணையத்தால் நேரடியாகவோ அல்லது தேசிய பால்வள வாரியம் மூலமாகவோ நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

இணையத்தின் கட்டுப்பாட்டில், சென்னையில் மாதவரம், அம்பத்துார் மற்றும் சோழிங்கநல்லுார் ஆகிய 3 திரவப்பால் பண்ணைகளும், அம்பத்துாரில் ஒரு பால் உபபொருட்கள் தயாரிப்பு தொழிற்சாலையும் மற்றும் திருவண்ணாமலையில்



பால்பண்ணை மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை ஒன்றும் இயங்கி வருகின்றன. 3 திரவப்பால் பண்ணைகள் மற்றும் பால் உபபொருட்கள் தொழிற்சாலை ஆகியன சர்வதேச தரச் சான்றிதழ் (ISO) மற்றும் தரத்தை உறுதி செய்ததற்கான சர்வதேச தரச்சான்று HACCP (Hazard Analysis and Critical Control Point) ஆகியவற்றை பெற்றுள்ளன.

இணையத்தின் கீழ் செயல்படும் பால் பண்ணைகள் மற்றும் இதர அலகுகளின் விபரம் பின்வருமாறு:

### 4.1. மாதவரம் பால்பண்ணை

ஆவின் குடும்பத்தில் மிகப் பழமையான பால்பண்ணையான மாதவரம் பால்பண்ணை, நியூசிலாந்து அரசின் நிதியுதவியுடன் கொழும்பு திட்டத்தின் கீழ், நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கையாளும் திறனுடன் 1962ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. இப் பால்பண்ணை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால், பல்வேறு நிலைகளில் விரிவாக்கம் செய்யப்பட்டு, தற்போது நாளொன்றுக்கு 3.5 இலட்சம் லிட்டர் பால் கையாளப்பட்டு வருகிறது. இப்பால்பண்ணை வடசென்னை பால் நுகர்வோருக்கு பதப்படுத்திய பாலை 43 வாடகை தட வண்டிகள், 20 தனியார்

முகவர் வண்டிகள் மற்றும் 2 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்க பால் வழித்தடங்கள் மூலம் விநியோகிக்கிறது.

கடந்த 5 ஆண்டுகளில், பல உட்கட்டமைப்புகள் மற்றும் மேம்பாட்டுப்பணிகள் மாதவரம் பால்பண்ணையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2.2 இலட்சம் லிட்டர் பால் சேமிப்பு கொள்கலன்கள், 80,000 லிட்டர் கொள்ளவு பால் குளிரூட்டும் அறை மற்றும் 30 மெட்ரிக் டன் வெண்ணெய் வைப்பதற்கான ஆழ்நிலை உறை கிடங்கு அறை ஆகியன இப்பால் பண்ணையில் சேர்க்கப்பட்டுள்ளன. ஒரு 20 KLPH (Kilo Litre Per hour) பதப்படுத்தும் இயந்திரம், 20 KLPH ஹோமோஜனைசர், 6 அதிவேக சிப்பம் கட்டும் இயந்திரங்கள், ஒரு 5 லிட்டர் பாக்கெட் நிரப்பும் இயந்திரம், 2 டப் சுத்தம் செய்யும் இயந்திரங்கள் மற்றும் 500 KVA தடையில்லா மின்சாரம் வழங்கும் மின்கலம் ஆகியனவும் இங்கு நிறுவப்பட்டுள்ளன.

மேலும் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ஆற்றல் திறன்மிக்க குளிரூட்டும் அமைப்பு ரூ.650 இலட்சம் செலவின மதிப்பில் முடிக்கப்பட்டு, தற்போது சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.



### 4.2. அம்பத்தூர் பால்பண்ணை

அம்பத்தூர் பால்பண்ணை, நாளொன்றுக்கு 2 லட்சம் லிட்டர் கொள்ளளவுடன் 1976ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பின்னர், இப்பால்பண்ணையின் கொள்ளளவு, நாளொன்றுக்கு 4 லட்சம் லிட்டர் பால் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டது. இப்பால் பண்ணை மத்திய சென்னை பால் நுகர்வோருக்கு 42 வாடகை வழித்தட வண்டிகள், 39 தனியார் முகவர் வண்டிகள் மற்றும் 12 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் வழித்தட வண்டிகள் ஆகியவற்றின் மூலம் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில், அம்பத்தூர் பால் பண்ணையின் உட்கட்டமைப்பு வசதிகள் வலுவூட்டப் பட்டுள்ளன. 1.0 லட்சம் லிட்டர் பால் சேமிப்பு கொள்கலன், 1.0 லட்சம் லிட்டர் பால் குளிரூட்டும் அறை மற்றும் 300 மெட்ரிக் டன் வெண்ணெய் வைப்பதற்கான ஆழ்ந்த உறைநிலை அறை ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் முழுமையாக தானியங்கி இரு சுற்று சுத்திகரிப்பு அமைப்பு, 20 KLPH பதப்படுத்தும் இயந்திரம், 20 KLPH ஹோமோஜனைசர், 8 அதிவேக சிப்பம் கட்டும் இயந்திரங்கள், ஒரு 5 லிட்டர் பாக்கெட் நிரப்பும் இயந்திரம், 2 டப் சுத்தம் செய்யும் இயந்திரங்கள், 500 KVA தடையில்லா மின்சாரம் வழங்கும் மின்கலமும் மற்றும் 1000 KVA மின்மாற்றி

ஆகியனவும் நிறுவப்பட்டுள்ளன. கொதிகலன்களுக்கு சுடுநீர் அளிக்க ஏதுவாக, சூரிய ஒளி சுடுநீராக்கி (Solar Water Heater) ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. தற்போது ரூ.540 இலட்சம் செலவில் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஆற்றல் திறன்மிக்க குளிரூட்டும் அமைப்பு அமைத்திடவும், ரூ.192 இலட்சம் செலவில் தற்போதுள்ள 300 மெட்ரிக் டன் வெண்ணெய் ஆழ்ந்த உறைநிலை அறையினை மறு சீரமைப்பு செய்யவும், ரூ.808 லட்சம் செலவில் 1.50 இலட்சம் லிட்டர் பால் சிப்பம் கட்டும் மற்றும் சேமிக்கும் வசதியுடன் கூடிய புதிய கூடுதல் கட்டிடம் கட்டும் பணியும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் யாவும், 2016 ஆகஸ்ட் இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4.3. சோழிங்கநல்லூர் பால்பண்ணை**

தென்னிந்தியாவின் முதல் கணினி மயமாக்கப்பட்ட சோழிங்கநல்லூர் தானியங்கி பால்பண்ணை, நாளொன்றுக்கு 4 லட்சம் லிட்டர் பால் கொள்ளளவுடன் 1996ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில், நாளொன்றுக்கு 3.50 இலட்சம் லிட்டர் பால், தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மூலம் மொத்த பால் விற்பனையை லாரிகள் மூலமாகவும், 50,000 லிட்டர் பாலை பாக்கெட் பாலாகவும்



விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டு, இப்பால்பண்ணை ஏற்படுத்தப்பட்டது. எனினும், பின்னர் ஏற்பட்ட மாறுபட்ட சந்தை சூழ்நிலை மற்றும் தேவைக்கேற்ப படிப்படியாக மொத்த பால் விற்பனையிலிருந்து பாக்கெட் பால் விற்பனைக்கு மாற்றப்பட்டது. தற்போது, இப்பால்பண்ணையில் நாளொன்றுக்கு 4.50 இலட்சம் லிட்டர் பால் கையாளப்பட்டு வருகிறது.

பால் பாக்கெட் விற்பனையினை மேற்கொள்ள, இப் பண்ணை 32 வாடகை வழித்தட வண்டிகளையும், 46 தனியார் முகவர் வழித்தட வண்டிகளையும் மற்றும் 6 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்க வழித்தட வண்டிகளையும் இயக்கி வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் அதிகரித்து வரும் பால் பாக்கெட்டுகளின் விற்பனைத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், 2.0 இலட்சம் லிட்டர் பால் சேமிக்கும் அளவிற்கு பால் சேமிப்பு கொள்கலன்களின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. 64 மெட்ரிக் டன் வெண்ணெய் வைப்பதற்கான ஆழ்ந்த உறை நிலை அறை ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. 1.50 லட்சம் லிட்டர் கூடுதல் கொள்ளளவு கொண்ட குளிரூட்டும் அறை, ஒரு 20 KLPH பதப்படுத்தும் இயந்திரம் மற்றும் ஹோமோஜனைசர், 5 அதிவேக சிப்பம் கட்டும்

இயந்திரங்கள், ஒரு 5 லிட்டர் பாக்கெட் நிரப்பும் இயந்திரம் மற்றும் 1 டப் சுத்தம் செய்யும் இயந்திரம் ஆகியன நிறுவப்பட்டுள்ளன.

மேலும், தற்போது நாளொன்றுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 100–110 லிட்டர் எரி எண்ணெய்க்கு பதிலாக, நாளொன்றுக்கு 1000–1100 கிலோ தயாரிக்கும் திறன் கொண்ட புதிய சூரிய ஒளி செறிவூட்டி ரூ.120 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு, ஆண்டொன்றுக்கு ரூ.12 லட்சம் சேமிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், ரூ.34 கோடி செலவில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலை புதிய ப்ளெக்ஸிபேக் முறையில் பால் நிரப்பும் வசதியுடன் கூடிய உயர் வெப்ப நிலையில் சிப்பம் கட்டும் கருவி நிறுவும் பணிகள் இப்பண்ணை வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது, பால் குளிரூட்டும் திறனை நாளொன்றுக்கு 6 லட்சம் லிட்டர் பால் என்ற அளவிற்கு உயர்த்திட ஏதுவாக, ரூ.139 இலட்சம் செலவில் கூடுதல் குளிரூட்டும் கருவி நிறுவப்பட்டு வருகிறது.



## 4.4. திருவண்ணாமலை பால்பண்ணை மற்றும் பால்பவுடர் தொழிற்சாலை

திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில், நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.72.60 கோடி செலவில், நாளொன்றுக்கு 2 லட்சம் லிட்டர் பால் கையாளும் திறனுள்ள பால்பண்ணை மற்றும் 20 மெட்ரிக் டன் பால்பவுடர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் ஒரு அலகாக நிறுவப்பட்டுள்ளது.

கடந்த 2015–16ம் ஆண்டில், 702.15 இலட்சம் லிட்டர் குளிரூட்டப்பட்ட பால், பதப்படுத்தப்பட்டு 5,945.64 மெட்ரிக் டன் பால் பவுடராகவும், 3,609.21 மெட்ரிக் டன் வெண்ணெய் ஆகவும் உருமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 4.5. அம்பத்தூர் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை

சென்னை அயனாவரத்தில் 1976ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த பால் பொருட்கள் தொழிற்சாலை அம்பத்துாருக்கு மாற்றப்பட்டு, 2003ஆம் ஆண்டு முதல் அம்பத்துார் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையாக இயங்கி வருகிறது. சென்னையில், ஆவின் பால் பொருட்களுக்கு அதிகரித்து வரும் தேவையை எதிர்கொள்ளும் வகையில், தற்போதுள்ள

அம்பத்தூர் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையின் விரிவாக்க பணிகள் ரூ.23.46 கோடியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்புதிய வசதியின் மூலம், நாளொன்றுக்கு 15,000 லிட்டர் ஐஸ்கீரிம் மற்றும் 1000 கிலோ பனீர் தயாரிக்கப்படும். இச்செலவினத்திற்கு ரூ.23.46 கோடியில் தேசிய புரதச்சத்து இயக்கத்தின் (National Mission for Protein Supplement) கீழ், ரூ.13.00 கோடி ஒதுக்கப்பட்டு எஞ்சிய 10.46 கோடி இணையத்தின் சொந்த நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது. இப்புதிய வசதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27.02.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**அட்டவணை – 1 ஆவின் பால் பொருட்களின் வகைகள்**

| இனிப்புகள் | ஐஸ் கிரீம் வகைகள் | நொதியூட்டப்பட்ட பால்பொருட்கள் | கூழ்ம பொருட்கள் மற்றும் பிற |
|---|---|---|---|
| • இனிப்பு கோவா<br>• பேரிச்சை கோவா<br>• மைசூர் பா<br>• குலோப் ஜாமூன்<br>• பால் பேடா | • கப் ஐஸ் கிரீம்<br>• குடும்ப சிப்பம்<br>• கசட்டா<br>• பந்து ஐஸ் கிரீம்<br>• சாக்கோபார்<br>• மாங்கோ டுயட் | • இனிப்பூட்டப் பட்ட யோகர்ட்<br>• பாக்கெட் தயிர்<br>• சிறப்பு தயிர் கப்புகள்<br>• பாக்கெட் லஸ்சி<br>• புரோபயோடிக் | • பனீர்<br>__பிற__<br>• இனிப்பு இல்லா கோவா<br>• நறுமண பால்<br>• நட்டி |
| | • பைனாப்பிள் டுயட்<br>• கிளாசிக் கோன்<br>• குல்பி பார்<br>• ஐஸ் கேன்டி<br>• பிரிமியம் கப் ஐஸ் கிரீம் | தயிர்<br>• புரோபயோடிக் லஸ்சி<br>• சாதாரண மோர்<br>• சிறப்பு மோர் | சாக்லேட்<br>• பால் சாக்லேட் |



பால் பொருட்கள் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் பால் பொருட்கள் 25 வழித்தடங்களில் குளிர்பதன வண்டிகள் மூலம் ( 5 வாகனங்கள் பிரத்யேகமாக ஐஸ்கிரீம் விற்பனைக்கென்றே), சென்னை சில்லறை விற்பனை மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஐஸ்கிரீம் மற்றும் இதர சில பால் பொருட்கள் 3 குளிர்பதன வண்டிகள் மூலம் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

## அட்டவணை – 2 பால் பொருட்கள் விற்பனை

| 2015–16 ஆம் ஆண்டில் பால் பொருட்களின் விற்பனை | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | விவரம் | அலகு | மொத்தம் | |
| | | | அளவு | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
| I | அம்பத்தூர் பால் உபபொருட்கள் | | | |
| 1 | ஐஸ் கிரீம் | லி. | 487471 | 1129.19 |
| 2 | குலோப்ஜாமுன் | கி.கி | 28165 | 104.14 |
| 3 | கோவா | மெ.டன் | 287 | 1135.30 |
| 4 | பால் பேடா | மெ.டன் | 15 | 59.83 |
| 5 | பனீர் | மெ.டன் | 34 | 103.12 |
| 6 | மோர் | லி. | 5.5 | 142.54 |
| 7 | மைசூர் பா | மெ.டன் | 44 | 195.18 |
| 8 | யோகர்ட் | எண்ணிக்கை | 75294 | 12.88 |
| 9 | லஸ்சி | இலட்சம் லிட்டர் | 2.18 | 215.07 |
| 10 | தயிர் 200 மிலி | இலட்சம் லிட்டர் | 4.0 | 280.84 |
| 11 | சுடு பால் | இலட்சம் லிட்டர் | 5.9 | 334.11 |
| 12 | எப்எம் "என்" ரிச் பாட்டில் | எண்ணிக்கை (இலட்சத்தில்) | 4.19 | 79.59 |
| 13 | மில்க் ஷேக்ஸ் | எண்ணிக்கை | 11055 | 6.89 |
| 14 | எப்எம்–பாதாம் /சாக்லெட் / பிஸ்தா | லி. | 6125 | 6.13 |
| 15 | பீசா / சான்ட்விச் | எண்ணிக்கை | 74000 | 25.71 |
| 16 | பால் பன் | எண்ணிக்கை | 7600 | 1.52 |
| 17 | மில்க் சாக்லெட் | எண்ணிக்கை (இலட்சத்தில்) | 1.27 | 35.76 |
| 18 | சிறப்பு இனிப்புகள் | மெ.டன் | 5.6 | 37.58 |
| | **மொத்தம் (I)** | | | **3,905.37** |
| II | **ஒன்றிய பால் பொருட்கள்** | | | |
| 1 | வெண்ணெய் (சமையல்) | மெ.டன் | 756 | 2577.75 |
| 2 | வெண்ணெய் (உப்பு) | மெ.டன் | 20 | 70.40 |
| 3 | நெய் | மெ.டன் | 1368 | 4918.41 |
| 4 | நிலைப்படுத்தப்பட்ட பால் (டெட்ரா பேக்) – 1000 மிலி | எண்ணிக்கை | 11520 | 6.70 |
| 5 | நறுமணப்பால் 200 மிலி | எண்ணிக்கை (இலட்சத்தில்) | 11.24 | 208.13 |
| 6 | மாவின் பானம் 200மிலி | எண்ணிக்கை (இலட்சத்தில்) | 1.15 | 16.28 |
| 7 | மில்க் ஷேக் டெட்ரா பேக்கில் | எண்ணிக்கை (இலட்சத்தில்) | 17.87 | 329.00 |
| 8 | ஆவின் டிலைட் (டெட்ரா பினோ) | லி. | 53000 | 26.70 |
| 9 | ஸ்கிம் மில்க் பவுடர் | மெ.டன் | 34 | 98.76 |
| 10 | பாதாம் மில்க் பவுடர் | மெ.டன் | 72 | 276.81 |
| 11 | பட்டர் மில்க் டெட்ராபேக்கில் | எண்ணிக்கை (இலட்சத்தில்) | 2.32 | 32.55 |
| 12 | ஊட்டி டீ | மெ.டன் | 2 | 2.24 |
| | **மொத்தம் (II)** | | | **8,568.65** |
| | **ஒட்டுமொத்தம் (I) + (II)** | | | **12,474.02** |

**4.6. கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளை பண்ணை – உதகமண்டலம்**

கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளை பண்ணை 1973ஆம் ஆண்டு உதகமண்டலத்தில் நிறுவப்பட்டது. இப்பண்ணை, பொலிகாளைகள் தாய்ப்பண்ணை மற்றும் பொலிகாளை பண்ணை ஆகிய இரண்டு பிரிவுகளுடன் இயங்கி வருகிறது. பொலிகாளைப் பண்ணை, வனத்துறையிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட 37.725 ஏக்கர் நிலப்பரப்பிலும், பொலிகாளைகளின் தாய்ப்பண்ணை வருவாய்த் துறைக்குச் சொந்தமான 46.33 ஏக்கர் நிலப்பரப்பிலும் இயங்கி வருகின்றன.

- **பொலிகாளைகளின் தாய் பண்ணை** – கால்நடை இன விருத்திக்கான நல்ல தரமான உறைவிந்து குச்சிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான அதிக மரபுத்திறன் கூடிய கலப்பின ஜெர்சி காளைகளை உற்பத்தி செய்யக் கூடிய உயர்ரக ஜெர்சி பசுக்கள் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணை அமைந்துள்ள காக்காத் தோப்பில், கால்நடைகளுக்குத் தேவையான தீவனத்திற்காக ஓட்ஸ், மைஸ் மற்றும் கிக்கியூ புல்வகைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.



- **பொலிகாளை பண்ணை** – உறைவிந்து குச்சிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஜெர்சி, கலப்பின ஜெர்சி, ஹால்ஸ்டீன் பிரீசியன் மற்றும் கலப்பின ஹால்ஸ்டீன் பிரீசியன் இன காளைகள் இங்கு பராமரிக்கப்படுகின்றன. இங்கு உற்பத்தியாகும் உறைவிந்து குச்சிகள், மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு முறையே, ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்வதற்காக அனுப்பப்படுகிறது. தற்பொழுது, கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளை பண்ணையில் இருக்கும் 100 காளைகளில் 76 காளைகள் உறைவிந்து சேகரிப்பிற்காக பயன்படுத்தப்படுகின்றன. இந்த பண்ணையில், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு ஜெர்சி மற்றும் இரண்டு ஹால்ஸ்டீன் பிரீசியன் பொலிகாளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த பண்ணையில், வருடத்திற்கு தோராயமாக 18.00 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

### 4.7. எருமை இன உறைவிந்து நிலையம் – ஈரோடு

- அனைத்து மாவட்ட ஒன்றியங்களின் தேவையின் அடிப்படையில், கருவூலக ஜெர்சி மற்றும் பொலிகாளை பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட பசு இன உறை விந்து குச்சிகள் இந்த நிலையத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையத்தின் மூலம், மாதம் ஒன்றிற்கு தோராயமாக 1.65 இலட்சம் உறைவிந்து குச்சிகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

- இந்நிலையம், பிரதி மாதம் சுமார் 10,000 எருமை இன உறைவிந்து குச்சிகளை கால்நடை பராமரிப்புத் துறையிடமிருந்து பெற்று, ஒன்றியங்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது.

- வம்சாவழி சோதனைத் திட்டத்தின் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட காளைக் கன்றுகளும் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### 4.8. கறவை இன மேம்பாட்டு திட்டம் (Dairy Herd Improvement Programme Actions (DIPA))

கறவை இன மேம்பாட்டு திட்ட நடவடிக்கைகள் அலகு ஈரோட்டில் செயல்பட்டு வருகிறது. இந்த அலகில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.



**வம்சாவழி சோதனைத் திட்டம் (Progeny Testing Programme-PTP)**

இந்திய அரசின் நிதி உதவியுடன், அதிக மரபுத்திறன் கூடிய கலப்பின பொலிகாளைகளை தேர்ந்தெடுக்கும் பொருட்டு, வம்சாவழி சோதனைத் திட்டம் சேலம், ஈரோடு, தர்மபுரி, கோயம்புத்துார், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஒன்றியங்களில், இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**களவெளி செயல்திறன் பதிவுத் திட்டம் (Field Performance Recording Programme-FPRP)**

களவெளி செயல்திறன் பதிவு திட்டத்தின் கீழ், கலப்பின ஜெர்சி இன கறவைகளின் பால் அளவைக் கணக்கிட்டு, திறன் நிரூபணம் செய்யப்பட்ட காளைகளின் உறைவிந்து மூலம் கருவூட்டல் செய்யப்பட்டு, அதிக மரபுத்திறன் கூடிய கலப்பின பொலிகாளை கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.


இத்திட்டம், இந்திய அரசின் நிதி உதவியுடன், சேலம், தர்மபுரி, ஈரோடு, கோயம்புத்துார், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு மாவட்ட ஒன்றியங்களில், இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம், கூட்டுறவு அமைப்பு மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கி வரும் நான்கு உறைவிந்து குச்சி நிலையங்களுக்கு உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்ய, இதுவரை **319** காளைக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 4.9. பால் விற்பனை

சென்னை பெருநகரில், சராசரியாக நாளொன்றுக்கு **11.22** இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. இதில் தோராயமாக **51,000** லிட்டர், பால் ஒரு லிட்டர் பால் பாக்கெட்டிலும் மீதமுள்ள பால் அரை லிட்டர் பாக்கெட்டிலும் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் ஆவின் நிறுவனத்தால் விழாக்கள், நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகளின் மொத்த தேவையை கருத்தில் கொண்டு சமீபத்தில் **5** லிட்டர் பால் பாக்கெட் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இவ்வகையில் நாளொன்றுக்கு **8,000** லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது.






**அட்டவணை –3 பால் விற்பனை விலை**

| வ. எண் | பாலின் வகை | பால் பை நிறம் | விவரம் | | 500 மில்லி லிட்டருக்கான விலை – ரூபாயில் | |
|---|---|---|---|---|---|---|
| | | | கொழுப்பு சத்து % | கொழுப்பு அல்லாத இதர சத்து % | அட்டை தாரர் களுக்கு | அதிகபட்ச சில்லரை விற்பனை விலை |
| 1 | இருநிலை சமன் படுத்திய பால் | மெஜந்தா | 1.5 | 9.0 | 16.50 | 17.00 |
| 2 | சமன்படுத்திய பால் | நீலம் | 3.0 | 8.5 | 17.00 | 18.50 |
| 3 | நிலைப்படுத்திய பால் | பச்சை | 4.5 | 8.5 | 19.50 | 20.50 |
| 4 | கொழுப்புச்சத்து நிறைந்த பால் | ஆரஞ்சு | 6.0 | 9.0 | 21.50 | 22.50 |


## அட்டவணை – 4

### பெருநகர விற்பனை பிரிவில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

| வ. எண் | உட்கட்டமைப்பு விவரம் | 2013–14 | 2014–15 | 2015–16 |
|---|---|---|---|---|
| 1 | விநியோக வழித்தடங்கள் | 113 | 117 | 119 |
| 2 | வட்டார அலுவலகங்கள் | 16 | 16 | 16 |
| 3 | பால் வழங்கும் நிலையங்கள் | 470 | 470 | 433 |
| 4 | விநியோகிக்கும் இடங்கள் | 311 | 311 | 361 |
| 5 | பாலகங்கள் | 93 | 93 | 114 |
| 6 | மொத்த பால் விநியோகிப்பாளர்கள் | 47 | 71 | 71 |
| 7 | பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் | 49 | 49 | 49 |
| 8 | ஆவின் உரிமம் பெற்ற சில்லறை விற்பனையாளர்கள் | 184 | 202 | 451 |
| 9 | பால் மற்றும் பால்பொருட்கள் விற்பனை மையம் | 215 | 215 | 245 |
| 10 | பால் பொருட்கள் விநியோக வழித்தடங்கள் | 14 | 16 | 25 |



### 4.10. விற்பனை வருவாய் விபரம்:- (இணையம் மற்றும் ஒன்றியங்கள்) –(Sales Revenue - Federation and Unions




2015-2016 ஆம் ஆண்டில் இணையத்தில் ரூ.1650.45 கோடியும் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் ரூ.3366.84 கோடியும் ஆக மொத்தம் ரூ. 5017.29 கோடி விற்பனை வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 4.11.பால் நுகர்வோர் சேவை மையம்

நுகர்வோர் தங்களது கருத்துக்களை பதிவு செய்யவும், குறைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ளவும், கட்டணமில்லா தொலைபேசியுடன் ( எண்.1800–425 – 3300 ) கூடிய

24 மணிநேர நுகர்வோர் சேவை மையம் சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள ஆவின் விற்பனை பிரிவில் 04.09.2003 முதல் செயல்பட்டு வருகிறது. கடந்த 2015–16ஆம் ஆண்டில் மொத்தம் 647 புகார்கள் பெறப்பட்டு, உரிய தீர்வு காணப்பட்டுள்ளது.

**5. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்**

தமிழகத்தில் சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து வருவாய் மாவட்டங்களையும் உள்ளடக்கி 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் இயங்கி வருகின்றன. இம்மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் நிர்வாகம், தலைவர் தலைமையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. இம்மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், அதன் உறுப்பினர்களான தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பால் கொள்முதல் செய்து, பால் சேகரிப்பு வழித்தட வாகனங்கள் மூலம் அருகிலுள்ள மொத்த பால் குளிர்விப்பு மையம் / குளிரூட்டும் நிலையம் / பால் பண்ணைக்கு பதப்படுத்தும் பணிக்காக பால் அனுப்பி வைக்கப்படுகிறது. துணைப்பதிவாளர்களுக்கு (பால்வளம்) கிராம அளவில் சங்கங்கள் அமைப்பதற்கு மாவட்ட ஒன்றியங்கள் உதவி செய்கின்றன.



**5.1.** மாவட்ட ஒன்றியங்கள், உள்ளூர் பால் தேவையை பூர்த்தி செய்தது போக, பாலை பதப்படுத்தி சென்னை மாநகரில் விற்பனை செய்வதற்காக இணையத்தின் மாநகர பால்பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கின்றன. மேலும் உபரி பால், வெண்ணெய் மற்றும் பால்பவுடர் தயாரிக்க ஏதுவாக மதுரை, ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலையில் உள்ள சமன்படுத்தும் பால்பண்ணைகளுக்கும் அனுப்பிவைக்கப் படுகிறது.

கடந்த 2015–16ஆம் ஆண்டில், உபரி பாலிலிருந்து 13,657 மெட்ரிக் டன் வெண்ணெய் மற்றும் 21,950 மெட்ரிக் டன் பால்பவுடர் இந்த சமன்படுத்தும் பால் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

## அட்டவணை – 5 ஒன்றியம் வாரியாக பால் கையாளும் திறன் (நாளொன்றுக்கு லிட்டரில்)

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | பால் பண்ணையின் பதனிடும் திறன் | | குளிரூட்டும் திறன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | திறன் | குளிரூட்டும் நிலையம் | | மொத்த பால் குளிர்விப்பான் | | மொத்தம் |
| | | | | எண்ணிக்கை | திறன் | எண்ணிக்கை | திறன் | |
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 1 | 50,000 | 2 | 60,000 | 11 | 45,000 | 1,05,000 |
| 2 | விழுப்புரம் | 1 | 1,00,000 | 2 | 1,40,000 | 19 | 78,000 | 2,18,000 |
| 3 | வேலூர் | 1 | 1,50,000 | 4 | 2,30,000 | 38 | 1,76,000 | 4,06,000 |
| 4 | தர்மபுரி | 1 | 2,00,000 | 2 | 60,000 | 16 | 68,000 | 1,28,000 |
| 5 | சேலம் | 1 | 3,00,000 | 3 | 2,10,000 | 50 | 1,99,000 | 4,19,000 |
| 6 | ஈரோடு | 1 | 3,00,000 | 3 | 1,35,000 | 30 | 1,44,000 | 2,79,000 |
| 7 | கோயம்புத்தூர் | 1 | 5,00,000 | 4 | 1,30,000 | 24 | 1,14,000 | 2,44,000 |
| 8 | நீலகிரி | 1 | 50,000 | 1 | 10,000 | 6 | 11,000 | 21,000 |
| 9 | மதுரை | 1 | 3,00,000 | 1 | 1,00,000 | 14 | 58,000 | 1,58,000 |
| 10 | திண்டுக்கல் | 1 | 30,000 | 2 | 40,000 | 12 | 50,000 | 90,000 |
| 11 | திருச்சிராப் பள்ளி | 1 | 1,50,000 | 3 | 2,30,000 | 42 | 2,00,000 | 4,30,000 |
| 12 | தஞ்சாவூர் | 1 | 26,000 | 1 | 10,000 | 13 | 51,000 | 61,000 |
| 13 | புதுக்கோட்டை | 1 | 35,000 | – | – | – | – | – |
| 14 | சிவகங்கை | 1 | 50,000 | 2 | 20,000 | 12 | 52,000 | 72,000 |
| 15 | விருதுநகர் | 1 | 50,000 | 1 | 10,000 | – | – | 10,000 |
| 16 | திருநெல்வேலி | 1 | 1,00,000 | 4 | 90,000 | 12 | 58,000 | 1,48,000 |
| 17 | கன்னியாகுமரி | 1 | 16,000 | – | – | – | – | – |
| | **மொத்தம்** | **17** | **24,07,000** | **35** | **14,75,000** | **299** | **13,04,000** | **27,79,000** |



### 5.2. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் கொள்முதல்

**2014–15** ஆம் ஆண்டில் ஒன்றியங்களில் பால் கொள்முதல் நாளொன்றுக்கு சராசரி **23.68** இலட்சம் லிட்டர் என்ற நிலையிலிருந்து, **2015–16** ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு சராசரி **28.97** இலட்சம் லிட்டராக **உயர்ந்துள்ளது. (**உயர்வு **22.34** சதவிகிதம்**).** இவ்வாண்டில் **27.6.2016** அன்று முன் எப்போதுமில்லாத சாதனை அளவாக, **31.39** இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப் பட்டுள்ளது.


நடப்பு ஆண்டு **2016–17–**ல் (ஏப்ரல் முதல் ஜுலை முடிய) சராசரியாக நாளொன்றுக்கு **29.32** இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் பால் கொள்முதல் செய்த விவரம் பின்வருமாறு:

## அட்டவணை – 6

### ஒன்றியங்களின் பால் கொள்முதல்

| வ. எண். | வருடம் | நாளொன்றுக்கு சராசரி பால் கொள்முதல் (இலட்சம் லிட்டரில்) |
|---|---|---|
| 1 | 2010–2011 | 20.67 |
| 2 | 2011–2012 | 21.40 |
| 3 | 2012–2013 | 24.36 |
| 4 | 2013–2014 | 23.22 |
| 5 | 2014–2015 | 23.68 |
| 6 | 2015–2016 | 28.97 |
| **7** | **2016–2017 ( ஜூலை 2016 வரை)** | **29.32** |






## அட்டவணை –7


### மாவட்ட ஒன்றியம் வாரியாக பால்கொள்முதல் (நாளொன்றுக்கு சராசரி லிட்டர்)

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | 2010–11 | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 ( ஜூலை வரை) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 49,349 | 56,000 | 75391 | 81598 | 103083 | 126688 | 93973 |
| 2 | விழுப்புரம் | 1,43,143 | 1,52,000 | 179514 | 172545 | 170793 | 196861 | 207864 |
| 3 | வேலூர் | 2,45,417 | 2,52,00 0 | 297743 | 281123 | 284965 | 306169 | 305314 |
| 4 | தர்மபுரி | 1,28,048 | 1,09,000 | 145698 | 128230 | 121778 | 173079 | 185096 |
| 5 | சேலம் | 3,99,851 | 4,24,00 0 | 467218 | 449553 | 456480 | 511652 | 520768 |
| 6 | ஈரோடு | 2,17,756 | 2,31,000 | 249478 | 234053 | 232371 | 307112 | 321654 |
| 7 | கோயம்புத்தூர் | 2,25,894 | 2,30,00 0 | 238545 | 233918 | 218175 | 281468 | 281735 |
| 8 | நீலகிரி | 18,668 | 17,000 | 17617 | 15722 | 15045 | 15828 | 14451 |
| 9 | மதுரை | 1,74,351 | 1,68,000 | 193177 | 176140 | 193988 | 268765 | 261762 |
| 10 | திண்டுக்கல் | 40,103 | 40,000 | 46052 | 41011 | 46091 | 63651 | 65464 |
| 11 | திருச்சிராப்பள் ளி | 2,75,298 | 2,94,00 0 | 314746 | 304085 | 312077 | 394829 | 423862 |
| 12 | தஞ்சாவூர் | 32,079 | 42,000 | 54165 | 51170 | 50352 | 53769 | 53371 |
| 13 | புதுக்கோட்டை | 12,584 | 14,000 | 18177 | 15112 | 29473 | 42718 | 42702 |
| 14 | சிவகங்கை | 28,225 | 33,000 | 43923 | 47313 | 49040 | 56645 | 60794 |
| 15 | விருதுநகர் | 8,628 | 12,000 | 16414 | 15443 | 16552 | 15964 | 15737 |
| 16 | திருநெல்வேலி | 61,996 | 58,000 | 68935 | 66954 | 58798 | 73167 | 68976 |
| 17 | கன்னியாகுமரி | 5,390 | 9,000 | 9561 | 7890 | 9250 | 9097 | 8605 |
|  | **மொத்தம்** | **20,66,780** | **21,40,000** | **24,36,353** | **23,21,860** | **23,68,311** | **28,97,463** | **29,32,129** |

# அட்டவணை – 8
## மாவட்ட ஒன்றியம் வாரியாக பால் விற்பனை

| வ. எண். | ஒன்றியத்தின் பெயர் | நாளொன்றுக்கு சராசரி பால் விற்பனை லிட்டரில் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2010–11 | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 (ஜூலை வரை) |
| 1 | காஞ்சிபுரம் – திருவள்ளூர் | 697 | 7,560 | 6,103 | 6,161 | 9,987 | 9022 | 11169 |
| 2 | விழுப்புரம் | 35,092 | 30,086 | 26,435 | 24,718 | 22,982 | 19790 | 21254 |
| 3 | வேலூர் | 77,511 | 87,847 | 79,164 | 79,896 | 81,563 | 69609 | 68409 |
| 4 | தர்மபுரி | 18,811 | 21,690 | 20,888 | 25,060 | 27,806 | 23588 | 23943 |
| 5 | சேலம் | 1,56,356 | 1,76,854 | 1,75,746 | 1,86,777 | 1,88,094 | 184667 | 188441 |
| 6 | ஈரோடு | 72,408 | 79,371 | 72,483 | 71,867 | 72,533 | 66276 | 65868 |
| 7 | கோயம்புத்தூர் | 1,62,928 | 1,58,175 | 1,48,606 | 1,49,880 | 1,49,010 | 137578 | 140943 |
| 8 | நீலகிரி | 16,836 | 16,543 | 16,226 | 17,955 | 17,315 | 16501 | 16583 |
| 9 | மதுரை | 1,89,162 | 1,46,605 | 1,57,789 | 1,64,767 | 1,60,159 | 153843 | 155051 |
| 10 | திண்டுக்கல் | 13,938 | 15,155 | 13,668 | 14,756 | 13,707 | 11117 | 10172 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 1,12,151 | 1,11,284 | 1,12,991 | 1,20,382 | 1,18,974 | 116436 | 117304 |
| 12 | தஞ்சாவூர் | 18,581 | 19,529 | 18,766 | 20,556 | 22,329 | 20114 | 20912 |
| 13 | புதுக்கோட்டை | 6,932 | 6,830 | 6,819 | 8,336 | 10,941 | 10789 | 11590 |
| 14 | சிவகங்கை | 30,972 | 27,605 | 27,807 | 30,274 | 31,967 | 28713 | 28435 |
| 15 | விருதுநகர் | 6,132 | 10,623 | 8,768 | 7,378 | 6,012 | 4118 | 4846 |
| 16 | திருநெல்வேலி | 59,150 | 48,818 | 47,508 | 47,063 | 42,910 | 41546 | 41724 |
| 17 | கன்னியாகுமரி | 17,537 | 13,825 | 14,576 | 16,068 | 14,939 | 15399 | 15387 |
| | **மொத்தம்** | **9,79,708** | **9,78,400** | **9,54,343** | **9,91,894** | **9,91,228** | **9,29,105** | **9,42,031** |






### 5.3. சமன்படுத்தும் பால்பண்ணைகள்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் கீழான திருவண்ணாமலை பால்பண்ணை மற்றும் பால்பவுடர் தொழிற்சாலையைத் தவிர தர்மபுரி, சேலம், ஈரோடு மற்றும் மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் மொத்தம் 4 சமன்படுத்தும் பால்பண்ணைகள் இயங்கி வருகின்றன. கொள்முதல் செய்யப்பட்ட உபரிபால் பால்பவுடராகவும், வெண்ணெய் ஆகவும் உருமாற்றம் செய்யப்படுகின்றன.

## அட்டவணை – 9

### சமன்படுத்தும் பால்பண்ணை அமைவிடங்கள்

| வ.எண் | சமன்படுத்தும் பால்பண்ணையின் அமைவிடம் | திறன் | |
|---|---|---|---|
| | | பால்பண்ணை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | பால்பவுடர் தொழிற்சாலை (நாளொன்றுக்கு மெட்ரிக் டன்னில்) |
| 1 | கிருஷ்ணகிரி | 2.00 | 10 |
| 2 | சேலம் | 3.00 | 10 |
| 3 | ஈரோடு | 3.00 | 40 |
| 4 | மதுரை | 3.00 | 10 |
| 5 | திருவண்ணாமலை | 2.00 | 20 |
| | மொத்தம் | 13.00 | 90 |

**5.4. ஈரோடு கால்நடை தீவன தொழிற்சாலை**

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தால் கால்நடை தீவன தொழிற்சாலை 1982ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலை, நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்டது. பல்வேறு வகையான தீவனங்கள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டு மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2013–14 ஆம் ஆண்டில் மூலப்பொருள் மற்றும் கால்நடைத் தீவன சேமிப்புக் கிடங்கின் கொள்ளளவு 3,350 மெட்ரிக் டன்னிலிருந்து 6,000 மெட்ரிக் டன் என



ரூ.3.50 கோடி முதலீட்டில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. 2015–16 ஆம் ஆண்டில் 18,766 மெட்ரிக் டன் கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கால்நடைத் தீவன ஊட்டச்சத்து கறவை மாட்டின் உற்பத்தித்திறன் மற்றும் சினை பிடித்தலுக்கு பெறும் பங்கு வகிக்கின்றது. கடந்த ஐந்தாண்டுகளில், கால்நடை தீவன விற்பனை விலையில் மானியம் மற்றும் பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சிகள் மூலம், கால்நடைத் தீவனத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. இதன் விளைவாக, ஆவின் மூலம் மாவட்ட ஒன்றியங்களால் விற்பனை செய்யப்பட்ட கால்நடைத்தீவனத்தின் அளவு கடந்த 5 ஆண்டுகளில் 12 மடங்காக உயர்ந்துள்ளது.


தற்போது ஈரோடு ஒன்றியத்தில் தயாரிக்கப்படும் கால்நடை தீவனத்தின் அளவை விட கூடுதல் தேவையை ஈடு செய்ய, தமிழ்நாடு கூட்டுறவு வாணிப இணையம் (TANFED) மற்றும் ஆந்திரபிரதேசம் கூட்டுறவு விற்பணை இணையத்தின் (APMARKFED) மூலம் பெறப்படுகின்றது. நீண்ட கால நடவடிக்கையாக ஈரோடு கால்நடைத் தீவன தொழிற்சாலையின் உற்பத்தித்திறன் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்னிலிருந்து 250 மெட்ரிக் டன் ஆக அதிகரிக்க ரூ. 20.36 கோடி செலவில்

பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் டிசம்பர் 2016–ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை – 10**

**கால்நடை தீவனம் வழங்கிய விவரங்கள்**

| ஆண்டு | மொத்தம் (மெட்ரிக் டன்) |
|---|---|
| 2010 – 11 | 4612 |
| 2011 – 12 | 15046 |
| 2012 – 13 | 31093 |
| 2013 – 14 | 53292 |
| 2014 – 15 | 51702 |
| 2015 – 16 | 58652 |







**5.5. தாது உப்புக் கலவை தொழிற்சாலை**

நான்கு தாது உப்புக்கலவை தொழிற்சாலைகள் விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் இயங்கி வருகின்றன. இவை ஒவ்வொன்றும், நாளொன்றுக்கு 12 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும்.

**அட்டவணை – 11**

**தாது உப்புக் கலவை வழங்கிய விவரங்கள் 2011–16**

| ஆண்டு | மொத்தம் (மெட்ரிக் டன்) |
|---|---|
| 2011 – 12 | 171.599 |
| 2012 – 13 | 131.103 |
| 2013 – 14 | 390.674 |
| 2014 – 15 | 244.422 |
| 2015 – 16 | 966.080 |




**6. தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள்**

தமிழகத்தில் கிராம அளவில் 12,105 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 1,793 மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் ஆகும்.

பால் நுகர்வோர் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 62 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து ஆண்டு முழுவதும் தினசரி இருவேளைகளிலும் பாலை கொள்முதல் செய்கின்றன.




இதற்காக, பாலின் தரத்திற்கேற்ப பால் உற்பத்தியாளர்களுக்கு கட்டுப்படியாகும் பால்கொள்முதல் விலை வழங்கப்பட்டு வருகிறது. 01.11.2014 முதல் பசும் பால் கொள்முதல் விலை ரூ.28/– ஆகவும், எருமைப்பால் கொள்முதல் விலை ரூ.35/– ஆகவும் உள்ளது. சங்கம் இலாபம் ஈட்டுகிற காலத்தில், பால் ஊற்றும் உறுப்பினர்களுக்கு ஈவுத்தொகை, ஊக்கத்தொகை மற்றும் கூடுதல் கொள்முதல் விலை ஆகியன வழங்கப்படுகின்றன.

பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரும் நோக்கில், கடந்த 5 ஆண்டுகாலத்தில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. அக்காலகட்டத்தில் 4,443 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## அட்டவணை –12

**பதிவு செய்யப்பட்ட புதிய சங்கங்களின் எண்ணிக்கை**

| வ. எண். | ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2011–12 | 867 |
| 2 | 2012–13 | 1,491 |
| 3 | 2013–14 | 977 |
| 4 | 2014–15 | 842 |
| 5 | 2015–16 | 266 |
| | மொத்தம் | 4443 |






## 6.1. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்

கிராம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் நாளொன்றுக்கு சுமார் 36 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்கிறது. அதில் சுமார் 4.5 இலட்சம் லிட்டர் பால் உள்ளூர் தேவைக்கு விற்பனை செய்தது போக, உபரிபால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

### அ) செயற்கை முறை கருவூட்டல்

வருடத்திற்கு ஒரு கன்று உற்பத்தி செய்வதற்கு தக்க தருணத்தில் செயற்கை முறை கருவூட்டல் மிகவும் அத்தியாவசியமானதாகும். எனவே, பால் உற்பத்தியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு, பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு, ஒன்றியங்களின் கால்நடை மருத்துவர்கள் மற்றும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் பயிற்சி பெற்ற கிராம நிலைப் பணியாளர்கள் மூலம் அவர்களின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று, கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டு வருகிறது. 2015–16ஆம் ஆண்டில், 20.43 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளது.

## ஆ) கோமாரி நோய் தடுப்பு

கால்நடை பராமரிப்புத் துறையின் ஒருங்கிணைப்புடன், கோமாரி நோய் தடுப்பூசிகள், வருடத்திற்கு இரண்டு முறை (மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில்) கூட்டுறவு அமைப்பில் உள்ள சுமார் 17.00 இலட்சம் கால்நடைகளுக்கு செலுத்தப் பட்டு வருகிறது.

## 6.2. தொடக்க பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்

தரமான பால் மற்றும் பால் பொருட்கள் பால் நுகர்வோருக்கு நியாயமான விலையில் குறித்த நேரத்தில் முறையாக சென்றடைவதை உறுதிசெய்வதற்காக பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், இணையம் / மாவட்ட ஒன்றியங்களிலிருந்து பால்பாக்கெட்டுகளை பெற்று அரசு நிர்ணயித்த விலையில் பால் நுகர்வோருக்கு வழங்குகின்றன.

சென்னை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மட்டும் 49 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் நாளொன்றுக்கு சுமார் 3.40 லட்சம் லிட்டர் பாலை விற்பனை செய்கின்றன.



## 7. திட்டங்கள்

## 7.1. தேசிய பால்வள மேம்பாட்டுத்திட்டம்

இதுவரை செயல்பாட்டில் இருந்த திட்டங்களான தரமான மற்றும் தூய பால் உற்பத்திக்கான கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டம், தீவிர பால் பெருக்குத்திட்டம் மற்றும் கூட்டுறவுகளுக்கு உதவுதல் – புனரமைப்பு திட்டம் ஆகியவைகள் ஒன்றாக இணைக்கப்பட்டு, 2014–15ஆம் ஆண்டிலிருந்து தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டம் என ஒரே திட்டமாக இயங்கி வருகிறது.

எனினும், 2014–15 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து நடைபெற்று வருகின்ற மேற்கூறிய மூன்று திட்டங்களும் முடிவடையும் வரை நடத்தப்படும்.

### திட்ட நோக்கங்கள்

1) தரமான பால் பெருக்கத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுதல்
2) பால் கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை ஆகியவற்றிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவி மேம்படுத்துதல்

3) பால் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்

4) கிராம அளவில் பால் கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்துதல்

5) பால்பெருக்கத்திற்கான தொழில் நுட்ப இடுபொருள் சேவை, கால்நடை தீவனம் மற்றும் தாது கலவை அளித்தல்

6) நிதி பற்றாக்குறையில் உள்ள ஒன்றியங்களுக்கு புனர்வாழ்வு அளித்தல்

தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இணையத்திற்கும், திருச்சி மற்றும் மதுரை ஒன்றியங்களுக்கும் ரூபாய் 40.16 கோடியில் மூன்று திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மொத்த ஒப்புதல் தொகையில் ரூபாய் 18.08 கோடி மத்திய அரசு உதவியாகவும், மீதமுள்ள ரூபாய் 22.08 கோடி திட்டம் செயல்படுத்தும் முகமை மூலமாகவும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் காலஅளவு 3 முதல் 5 ஆண்டுகள் ஆகும். இத்திட்டம் 2014–15 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



இதுவரை, மத்திய அரசு முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டுக்கான தொகையாக ரூபாய் 15.36 கோடியை விடுவித்துள்ளது.

**முக்கிய கூறுகள்**

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

1) குளிரூட்டப்பட்ட வாகன பெட்டகம் – 2 எண்ணிக்கை (Refrigerated puff insulated container vehicle - 2 nos.)

2) பால் பை தொட்டியை சுத்தம் செய்யும் இயந்திரம் – 2 எண்ணிக்கை

3) கழிவு நீரை சுத்திகரிக்கும் பிரிவு– இயந்திரம் – 2 எண்ணிக்கை

4) 9,000 லிட்டர் மற்றும் 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட முறையே 10 மற்றும் 5 எண்ணிக்கை பால் டேங்கர்கள் கொள்முதல்

5) ஆய்வுக்கூடங்களுக்கான சாதனங்கள் கொள்முதல்

**மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்**

- நாளொன்றுக்கு 10,000 லிட்டர் திறன் கொண்ட தயிர் தயாரிக்கும் பிரிவு
- 3,000 லிட்டர் திறன் கொண்ட தானியங்கி சுத்தப்படுத்தும் அமைப்பு, கொழுப்பு நீக்கும் இயந்திரம் (Cream separator), பாலில் உள்ள நீரை ஆவியாக்கும் இயந்திர நிலையம் (Milk condensing Plant) மற்றும் கொதிகலன்கள் கொள்முதல்
- பயிற்சிக் கூடத்தினை புத்தாக்கம் செய்தல்
- புல் நறுக்கும் கருவி (Chaff cutter) – 100 எண்ணிக்கை
- 300 ஏக்கரில் பசும்புல் தீவன விதைப்பை (Fodder Minikits)
- 7 டன் கொள்ளளவு கொண்ட கால்நடை தீவன போக்குவரத்து வாகனம் –1 எண்ணிக்கை
- கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி – 450 உறுப்பினர்கள்

**திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்**

- நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால்பதப்படுத்தும் புதிய பால்பண்ணை, 50,000 லிட்டர் சேமிப்பு திறன் கொண்ட பால் குளிர்விக்கும் அறை மற்றும் 50 மெ.டன் வெண்ணெய் ஆழ்நிலை உறைகிடங்கு அமைத்தல்
- பால் கூட்டுறவு சங்கத்திற்கான கட்டிடம் கட்டுதல்
- பால் குவளைகள் – 1500 எண்ணிக்கை வாங்குதல்
- புல் நறுக்கும் கருவி (Chaff cutter) – 50 எண்ணிக்கை
- 500 ஏக்கரில் பசும்புல் தீவன விதைப்பை (Fodder Minikits)
- கால்நடை தீவன சேமிப்பு கிடங்கு
- கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி – 450 உறுப்பினர்கள்
- மேலாண்மைகுழு உறுப்பினர்கள் மற்றும் ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி – 70 நபர்கள்

தற்சமயம் 2014–15 ஆம் ஆண்டிற்கு முன்பு தொடங்கப்பட்ட திட்டங்களில் தரமான மற்றும் தூய பால் உற்பத்திக்கான கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டம் ஈரோடு ஒன்றியத்திலும், தீவிர பால் பெருக்குத்திட்டம், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் விருதுநகர் ஒன்றியங்களிலும், கூட்டுறவுகளுக்கு உதவுதல் – புனரமைப்பு திட்டம் தஞ்சாவூர் மற்றும் காஞ்சிபுரம் – திருவள்ளூர் ஒன்றியங்களிலும் தேசிய

பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**அ) தரமான மற்றும் துாய பால் உற்பத்திக்கான கட்டமைப்பை வலுப்படுத்தும் திட்டம்**

இத்திட்டம், ஈரோட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்த தொகையான ரூபாய் 499.94 இலட்சத்தில் ரூபாய் 327.91 இலட்சம் விடுவிக்கப்பட்டு, மீதமுள்ள தொகையான ரூபாய் 172.03 இலட்சம் எதிர்நோக்கப்படுகிறது. முக்கியக் கூறுகளான மொத்த பால் குளிர்விப்பான் நிறுவுதல், இரசாயனம், பாத்திரங்கள், பால் இயந்திரங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்களை வலுப்படுத்துதல் போன்றவை முடிவடைந்துள்ளன.

**ஆ) தீவிர பால் பெருக்குத்திட்டம்**

பால் கொள்முதல், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் விருதுநகர் ஒன்றியங்கள் மூலம் பால் பதப்படுத்துதல் மற்றும் விற்பனைக்கான உட்கட்டமைப்புகள், மனிதவள மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக இறுதி தவணையான ரூ. 262.08 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இதன் தொடர்புடைய



பணிகள் அனைத்தும் செப்டம்பர் 2016ல் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இ) கூட்டுறவுகளுக்கு உதவுதல் – புனரமைப்பு திட்டம்**

இத்திட்டம், காஞ்சிபுரம் – திருவள்ளூர் மற்றும் தஞ்சாவூர் ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பால் உற்பத்தியாளர்களின் பால் பணபட்டுவாடா, பணிக்கொடை மற்றும் பிற ஒன்றியங்களுக்கு செலுத்த வேண்டிய பாக்கி கட்டணம் ஆகியவற்றிற்காக பயன்படுகிறது. காஞ்சிபுரம்– திருவள்ளூர் ஒன்றியத்திற்கான மொத்த தொகையும் பெறப்பட்டுள்ளது. தஞ்சாவூர் ஒன்றியத்திற்கான இறுதி தவணை தொகை ரூ.62.07 இலட்சம் மத்திய அரசிடம் இருந்து எதிர் நோக்கப்படுகிறது.

## 7.2. தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், பால்வளத்துறைக்கு பெரும் உந்துதல் அளிக்கப்பட்டு 2015–16 ஆம் ஆண்டுவரை ரூ.182.63 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கால்நடைகளின் நலன் பேணுதல், குளிர்பதன வசதிகளை நிறுவுதல்,

பாலுற்பத்தியை அதிகரித்தல், பால் கொள்முதலுக்கான உட்கட்ட அமைப்புகள், குளிரூட்டும் அறைகள் மற்றும் விற்பனையை மேம்படுத்துதல் போன்றவைகள் இத்திட்டத்தில் அடங்கும்.


கடந்த 5 ஆண்டுகளாக கீழ்க்கண்ட முக்கியமான திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன:

- 155 நடமாடும் அலகுகள் மூலம் பால் உற்பத்தியாளர்களின் இருப்பிடங்களிலேயே கால்நடை மருத்துவ சேவை.
- 31 மொத்த பால் குளிர்விப்பான்கள்
- காக்களூர் பால் பண்ணை விரிவாக்கம்
- இரண்டு குளிர்பதன வசதி உள்ள வாகனங்கள் (Refrigerated Van) மற்றும் மூன்று வெப்பம் கடத்தா வாகனங்கள் (Insulated van)
- கூடுதலாக மூன்று இலட்சம் லிட்டர் பால் குளிரூட்டும் வசதி கொண்ட அறை.
- 894 மெட்ரிக் டன் கொள்ளளவில் வெண்ணெய் உறை கிடங்கு
- 3,000 புதிய தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்
- 25 அதிவேக மற்றும் 11 மித வேக புதிய பால் பைகள் நிரப்பும் இயந்திரங்கள்.



- ஈரோடு பால்பண்ணையில், சில்லறை விற்பனைக்கான 100, 200 மற்றும் 500 கிராம் அளவில் வெண்ணையை சிப்பம் செய்ய இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள்
- அம்பத்தூர் பால்பண்ணையில் நாளொன்றுக்கு 15,000 லிட்டர் ஐஸ்கிரீம் மற்றும் 1,000 கிலோ பனீர் தயாரிக்கும் திறன் கொண்ட உற்பத்தி வசதி.
- சேலம் பால் பண்ணையில் உயர் வெப்ப நிலையில் 200 மி.லி. பால் சிப்பம் (Tetra Pack)கட்டும் வசதி
- 46 பால் டேங்கர்கள்
- 99 வெப்பம் சார்ந்த அச்சுப்பொறிகள்
- 10 பால் தொட்டி கழுவும் இயந்திரங்கள்
- மாதவரம் பால் பண்ணையில் குளிர்பதன அமைப்பு, பதப்படுத்துதல் மற்றும் சேமிப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.

2016–17ஆம் ஆண்டில் ரூ.68.86 கோடியில் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு மாநில அளவிலான ஒப்பளிப்பு குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.




### 7.3. நபார்டு நிதியுதவி திட்டம்

(Scheme under financial assistance of NABARD)

கிராமப்புற பால் உற்பத்தியாளர்களின் நலனுக்காக பால்வளத்துறையின் உட்கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில் கடந்த மூன்று ஆண்டுகளாக மாநில அரசானது நபார்டு கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ், கூட்டுறவு துறைக்கு நிதியுதவி அளித்து வருகிறது. 2014–15 மற்றும் 2015–16ஆம்



ஆண்டுகளில் ரூ.145.67 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட முக்கியமான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் தண்ணீர் சாத்தனூர் அணையிலிருந்து திருவண்ணாமலை பால் பவுடர் தொழிற்சாலைக்கு விநியோகிக்கும் திட்டம்.
- ஈரோடு கால்நடை தீவனத் தொழிற்சாலையின் உற்பத்தி திறனை நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்னிலிருந்து 250 மெட்ரிக் டன் ஆக உயர்த்துதல்
- நவீனப்படுத்துதல் மற்றும் விரிவாக்குதல் மூலம் கோயம்புத்தூர் பால் பண்ணையின் கையாளும் திறனை 2 இலட்சம் லிட்டரிலிருந்து நாளொன்றுக்கு 5 இலட்சம் லிட்டராக அதிகரித்தல்.
- சேலம் பால் பண்ணையில் செரிமான தொழில் நுட்ப உற்பத்தியின் (UASB) மூலம் கழிவு நீர் சுத்திகரிப்பு.
- சேலம் பால் பண்ணையில் தானியங்கி பெட் ஜாடியில் நெய் நிரப்பும் இயந்திரம்

- ஈரோடு பால் பண்ணையில் ஒரு மணி நேரத்திற்கு 20கிலோ லிட்டரில் பாலை பதப்படுத்தும் இயந்திரம், ஒரு மணி நேரத்திற்கு 20கிலோ லிட்டரில் கொழுப்பு நீக்கும் இயந்திரம், அதிவேக பால் பை இயந்திரம், பால் டப்புகளை சுத்தம் செய்யும் இயந்திரம் மற்றும் சூரிய ஒளி மூலம் சுடுநீர் தயாரிக்கும் இயந்திரம்.
- விழுப்புரம் பால் பண்ணையில் ஒருமணி நேரத்திற்கு 10கிலோ லிட்டரில் பாலை பதப்படுத்தும் இயந்திரம், ஒரு மணி நேரத்திற்கு 10கிலோ லிட்டரில் கொழுப்பு நீக்கும் இயந்திரம், பால் சேமிப்பு தொட்டி, பால் கொள்கலன் மற்றும் பால் தொட்டிகளை சுத்தம் செய்யும் இயந்திரம், தானியங்கி சுத்தம் செய்யும் அமைப்பு.
- வேலூர் பால் பண்ணையில், நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் சிப்பம் கட்டுதல் மற்றும் குளிர்விக்கும் அறை வசதிகள்.
- திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் அதி நவீன பாலகங்கள்

**செயல்பாட்டில் உள்ள திட்டங்கள்**

- அம்பத்துார் பால் பொருட்கள் தொழிற்சாலையில் உள்ள ஐஸ்கீரிம் மற்றும் பனீர் பகுதி வளாகத்தில் நொதியூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் மற்றும் சிப்பம் கட்டுதல்



- சோழிங்கநல்லுார் பால் பண்ணையில் நீண்ட காலம் கெடாது இருக்கும் உயர் வெப்பநிலை சிப்பம் கட்டும் பகுதி
- நாளொன்றுக்கு 2.1 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட 42 மொத்த பால் குளிர்விப்பான்கள். ஈரோடு – 36, தருமபுரி – 5 மற்றும் விருதுநகர்–1
- திருநெல்வேலி (100) மதுரை (700) திருவண்ணாமலை (220) மற்றும் திருச்சி (100) பால்பண்ணைகளில் ரூ. 10.51 கோடி செலவில் 1120 மெட்ரிக் டன் வெண்ணெய் சேமிப்பு வசதிகள்.
- மதுரை (600) திருவண்ணாமலை (425) திருச்சி (100) மற்றும் கோயம்புத்துார்(600) பால்பண்ணைகளில் 1725 மெட்ரிக் டன் பால்பவுடர் சேமிப்பு வசதிகள் .
- காஞ்சிபுரம்–திருவள்ளூர் ஒன்றியத்தின் காக்களூர் பால்பண்ணையில் பால் பதப்படுத்தும் திறனை 50,000 லிட்டரிலிருந்து 1 இலட்சம் லிட்டராக உயர்த்துதல்.
- திருநெல்வேலி பால் பண்ணையில் 100 மெ.டன் கால்நடை தீவன சேமிப்பு வசதி

## 7.4. தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம்

திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை ஆகிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களிலும், அம்பத்தூர், மாதவரம், சோழிங்கநல்லூர் பெருநகர பால் பண்ணைகளிலும் குளிர்சாதன வசதி மற்றும் குளிர்பதன கிடங்கு உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக, இத்திட்டத்திற்கான ரூ.18.42 கோடி மொத்த ஒதுக்கீட்டில், ரூ.8.70 கோடியினை மத்திய அரசு மானியமாக அளித்துள்ளது. அதில், ரூ.3.65 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.14.77 கோடி ஒன்றியங்களின்/ இணையத்தின் சுய நிதி ஆகும். இத்திட்டத்தின் கீழ் சோழிங்கநல்லூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சி பால் பண்ணைகளில் 5.3 இலட்சம் லிட்டர் வரை குளிர்ப்பதன வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், திருச்சி பால் பண்ணையில் 100 மெட்ரிக் டன் வெண்ணெய் உறை கிடங்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, அம்பத்தூர் பால் பண்ணையில் பால் சிப்பம் கட்டும் பகுதி பணிகள் 1.5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட குளிர்பதன அறையில் நடைபெற்று வருகிறது. இப்பணி 2016 ஆகஸ்ட் மாத இறுதிக்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# 8. நடைமுறையில் உள்ள பெரும் திட்டங்கள்

## 8.1 .பெரம்பலூர் புதிய பால் பண்ணை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய பால் பண்ணை அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி ரூ.36.28 கோடி செலவில் நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்ட பால் பண்ணை அமைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் மாநில அரசு திருச்சிராப்பள்ளி ஒன்றியத்திற்கு ரூ.18.14 கோடியை வட்டியில்லா கடனாக வழங்கியுள்ளது. தேசிய பால்வள மேம்பாட்டுத்திட்டம் (NPDD) மூலம் ரூ.9.08 கோடியும், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஒன்றியத்தின் சொந்த நிதியில் இருந்து ரூ.9.06 கோடியும் இத்திட்டத்திற்காக பயன்படுத்தப்படவுள்ளது. இப்பால்பண்ணை பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுக்காவில் உள்ள பாடலூர் (கிழக்கு) என்ற கிராமத்தில் 23.62 ஏக்கரில் அமைக்கப்பட்டு வருகிறது. தேசிய பால்வள வாரியம் முழு ஒப்பந்த முறையில் இப்பணியை மேற்கொண்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15.07.2015 அன்று இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பணிகள் முடிவுறும் நிலையில் முன்னேற்றமாக

உள்ளதால் இத்திட்டம் 2016 செப்டம்பர் மாத இறுதிக்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 8.2. மதுரை பால் பண்ணை விரிவாக்கம்

மதுரை பால் பண்ணை ரூ.37.54 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதன் கீழ் தட்டு குளிர்விப்பான்(Plate Chiller), ஹோமோஜினைசர், கிரீம் பதப்படுத்துதல், கிரீம் சேமிப்பு தொட்டி, உயர்வேக பை அடைக்கும் இயந்திரங்கள், ஜெனரேட்டர், மின் சேமிப்புடன் கூடிய ஒருங்கிணைக்கப்பட்ட குளிர்சாதன அமைப்பு போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் இரண்டு இலட்சம் லிட்டர் திறன் கொண்ட பால் குளிர்விக்கும் அறை, 700 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட வெண்ணெய் ஆழ்ந்த உறைகிடங்கு, 600 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பால் பவுடர் சேமிப்பு கிடங்கு போன்றவைகளும் இத்திட்டத்தில் அடங்கும். மேற்கண்ட பணிகளினால் மதுரை பால் பண்ணையின் பால் கையாளும் திறன் நாளொன்றுக்கு 3 இலட்சத்தில் இருந்து 5 இலட்சம் வரை அதிகரிக்கும். மேலும், நாளொன்றுக்கு 10,000 லிட்டர் தயிர் உற்பத்தி செய்யும் வசதியும் அமைக்கப்படும். இது தவிர தேனி



குளிரூட்டும் நிலையத்தை நவீன மயமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 8.3. சோழிங்கநல்லூர் பால்பண்ணையில் உயர் வெப்பநிலையில் பால் பதப்படுத்துதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, சோழிங்கநல்லூார் பால் பண்ணையில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலை 200 மிலி/500 மிலி/1000 மிலி என்ற அளவுகளில் புதிய ப்ளெக்ஸிபேக் முறையில் பால் நிரப்பும் வசதியுடன் கூடிய உயர் வெப்ப நிலையில் சிப்பம் கட்டி, சாதாரண அறை வெப்பநிலையில் 30–90 நாட்களுக்கு பாதுகாப்புத் தன்மை மாறாமல் இருப்பதற்கான உட்கட்டமைப்பு ரூ.34 கோடியில் நிறுவப்பட்டு வருகிறது. இப்பணிகள் அனைத்தும் தேசிய பால்வள வாரியத்தின் மூலம் (NDDB) முழு ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

**8.4. ஈரோடு கால்நடைத்தீவன ஆலை**

ஈரோடு கால்நடைத்தீவன ஆலையின் உற்பத்தித் திறன் ரூ.20.36 கோடி செலவில் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்னிலிருந்து 250 மெட்ரிக் டன்னாக விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இப்பணிகள் அனைத்தும் தேசிய பால்வள வாரியத்தின் மூலம் (NDDB) முழு ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்ட நிலையில் இயந்திரங்கள் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை டிசம்பர் –2016க்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**8.5. வெண்ணைய் மற்றும் பால் பவுடர் சேமிப்பு கிடங்கு வசதிகள் விரிவாக்கம்**

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆவின் நிறுவனத்தில் 1,000 மெட்ரிக் டன் பால் பவுடர் சேமிப்புக் கிடங்கு மற்றும் 1,330 மெட்ரிக் டன் வெண்ணெய் ஆழ் உறைகிடங்கு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. பால் கொள்முதல் அதிகரிப்பால், ஆவின் நிறுவனம் பால் பவுடர் மற்றும் வெண்ணெய் சேமிப்பு



கிடங்கு வசதியை உருவாக்க மேலும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, திருநெல்வேலி, மதுரை, திருவண்ணாமலை மற்றும் திருச்சி பால் பண்ணைகளில் ரூ.10.51 கோடி செலவில் 1,120 மெ.டன் கொள்ளளவு திறன் கொண்ட வெண்ணெய் சேமிப்பு வசதி பணிகள் நடந்து வருகிறது.

ரூ.4.74 கோடியில் மதுரை, திருவண்ணாமலை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் பால்பண்ணைகளில் 1,725 மெட்ரிக் டன் அளவுள்ள பால் பவுடரை சேமித்து வைப்பதற்கான, சேமிப்பு கிடங்குகள் கட்டப்பட்டு வருகிறது. கட்டுமான பணிகள் அனைத்தும் பிப்ரவரி 2017–ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**8.6. அம்பத்தூரில் புதிய நொதியூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிக்கும் மற்றும் சிப்பம் கட்டும் பிரிவு அமைத்தல்**

சென்னை மாநகரத்தில் அதிகரித்து வரும், ஆவின் ஐஸ்கிரீம் மற்றும் பனீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அம்பத்தூர் பால்பொருட்கள் பண்ணை வளாகத்தில் ரூ.23.46 கோடி செலவில் புதிய ஐஸ்கிரீம் மற்றும் பனீர்

தயாரிக்கும் பிரிவு அமைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27.2.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது. அதே வளாகத்தில் நொதித்தல் முறையில் தயாரிக்கப்படும், பால் உப பொருட்களான தயிர், லஸ்சி, மோர் தயாரிக்க 40,000 லிட்டர் கொள்ளளவில் ரூ.9.18 கோடி மதிப்பீட்டில் புதிய பிரிவு அமைக்கப்பட்டுவருகிறது. இந்த புதிய பிரிவின் இயந்திரத் தளவாடங்கள் அமைக்கும் பணிகள் தேசிய பால்வள வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பணிகள் அனைத்தும் செப்டம்பர் 2016–க்குள் முடிவடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

### 8.7. வாடிக்கையாளர் உதவி மையம் மற்றும் நிர்வாக அலுவலக கட்டிடம் நந்தனம்

2013–14ஆம் ஆண்டு சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் நந்தனத்தில் வாடிக்கையாளர் உதவிமையம் மற்றும் நிர்வாக அலுவலக கட்டிடம் கட்ட அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.07.2015 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு ரூ.31.29 கோடி செலவில் கட்டிடப்பணிகள் நடைபெற்று வருகிறது. இக்கட்டிடத்தின் மொத்த பரப்பளவு



1,13,000 சதுர அடியும், ஒன்பது மாடிகள் கொண்டதாகவும் இருக்கும். இக்கட்டிடத்தின் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, தற்பொழுது ஐந்து மாடிகள் வரை கட்டுமான பணிகள் நிறைவு பெற்றுள்ளன. பணிகள் அனைத்தும் ஆகஸ்ட் 2017–க்குள் முடிவுறும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### 8.8. அதி நவீன பாலகம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் சென்னை மாநகரத்தில் 16 அதிநவீன பாலகங்கள் ரூ.10 கோடி செலவில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பின்படி, 5 நவீன பாலகங்கள் ரூ.4.10 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 11 அதிநவீன பாலகங்களில் பணிகள் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு பாலகத்திலும் பல்வேறு கட்டங்களில் உள்ள பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

## 8.9. பால் பண்ணைகளில் மரபு சாரா எரிசக்தி பயன்பாடு

பால் பண்ணை செயல்பாடுகளில் மரபு சாரா எரிசக்தி பயன்பாட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு ஆவின் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த வகையில் 8 பால் பண்ணைகள், 4 குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் 100 மொத்த பால் குளிர்விப்பான்கள் ஆகியவற்றில் சூரிய ஒளி மூலம் 80° செல்சியஸ் வெப்பத்தில் சுடுநீர் தயாரிக்க 1.11 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த சுடுநீர், கொதிகலன்களின் நீராவி உற்பத்திக்காக அல்லது பால் சேமிப்பு தொட்டி மற்றும் பால் கொள்கலன்களை சுத்திகரிப்புக்கு நேரடியாக பயன்படுத்தப்படுகிறது. சேலம் பால் பண்ணையில் 2 எண்ணிக்கை கொண்ட ஒரு சூரிய ஒளி குவிநோக்கி (Concentrated Solar Thermal) நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் உற்பத்தியாகும் நீராவி பால் பதப்படுத்துவதற்கு நேரடியாக பயன்படுத்தப்படுகிறது. இவ்வசதிகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக, மத்திய அரசின் "CST and Solar Cooker Excellence Award 2016" என்ற விருது 29.04.2016ல் ஆவின் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டது. இது போன்ற மற்றுமொரு சூரிய ஒளி குவிநோக்கி (CST) சோழிங்கநல்லூர்



பால் பண்ணையில் நிறுவப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.

மேலும், சேலம் மற்றும் திருவண்ணாமலையில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலைகளில் Up flow Anaerobic Sludge Blanket (UASB) தொழில்நுட்ப வசதிமூலம் பால் பண்ணை கழிவு நீர் சுத்திகரிக்கப்படுகிறது. சேலம் பால் பண்ணையின் Bio–Digesterல் உருவாகும் மீத்தேன் வாயு, பால் பண்ணை சிற்றுண்டி சாலையில் எரிபொருளாக பயன்படுகிறது. இது போன்ற அமைப்பினை அம்பத்தூர் மற்றும் கோயம்புத்தூர் பால் பண்ணைகளில் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து பணிகளும் டிசம்பர் 2016ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 8.10. தேசிய பால்வளத் திட்டம்–I (National Dairy Plan-I -NDP)

### 8.10.1. வம்சாவழி சோதனைத் திட்டம்

தேசிய பால்வளத் திட்டத்தின் கீழ், கலப்பின ஜெர்சி பசுக்களுக்கு வம்சாவழி சோதனைத் திட்டம் ரூ.39.28 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், 2012–13 முதல் வேலூர், விழுப்புரம், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சி ஆகிய ஐந்து மாவட்ட ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு, 2017– 18 ம் ஆண்டு முடிவில் அதிக பால் உற்பத்தி மரபுத்திறன் உள்ள 247 பொலி காளைகள் விந்து உற்பத்திக்காக உற்பத்தி செய்யப்படும்.

கறவைகளின் பால் உற்பத்தித் திறன் அளவுகளான பால் உற்பத்தி அளவு, பாலின் தரம், பால் உற்பத்தி மரபுத் திறன் அடிப்படையின் மூலம், பிறந்த கிடாரி கன்றுகளின் செயல்பாடுகளை கொண்டு காளைகளின் தரம் வரிசைப்படுத்தப்பட்டு, அதிக பால் உற்பத்திக்கான மரபுத் திறன் கொண்ட உறைவிந்து உற்பத்தி செய்யப்படும்.

**8.10.2. ஜெர்சி கருவூல பொலிகாளை பண்ணையை மேம்படுத்துதல்**

தேசிய பால்வளத்திட்டத்தின் கீழ், உதகமண்டலத்தில் உள்ள ஜெர்சி கருவூல பொலிகாளை பண்ணை ரூ.1,434.74 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ், ஆத்தூரில் இளம் காளை கன்றுகளை பராமரிக்கும் கொட்டகையின் சுற்றுச் சுவர்



அமைப்பது மட்டுமல்லாமல், ஈரோட்டில் இளம் காளை கன்றுகளை பராமரிக்கும் கொட்டகை (quarantine), புதுக்குடியில் கன்று வளர்ப்பு கொட்டகை மற்றும் உதகமண்டலத்தில் உள்ள ஜெர்சி கருவூல பொலிகாளை பண்ணையை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கூடுதலாக, பல்வேறு ஆய்வுக்கூடக் கருவிகள், பண்ணை இயந்திரங்கள், கணினி மற்றும் தொலை தொடர்பு சாதனங்களும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

**8.10.3. கிராமிய அளவில் பால் கொள்முதல் திட்டம்**

தேசிய பால்வள திட்டத்தின் கீழ், கிராமிய அளவில் பால் கொள்முதல் திட்டம், சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, வேலூர், திருச்சி மற்றும் காஞ்சிபுரம்–திருவள்ளூர் ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், மொத்த பால் குளிர்விப்பான்கள், தானியங்கி பால் சேகரிக்கும் கருவிகள் மற்றும் பால் கேன்கள் வழங்கப்பட்டு வருகிறது. சங்க பணியாளர்கள், சங்க நிர்வாகக்

குழு உறுப்பினர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 2014–15 ஆம் ஆண்டிலிருந்து 2016–17ஆம் ஆண்டு வரையுள்ள மூன்று ஆண்டுகளுக்கான இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.1,255.37 இலட்சம் ஆகும்.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலமாக, தூய பால் உற்பத்தி மட்டுமல்லாது கறந்த பாலின் தரம் உயர்ந்து காணப்படுகிறது.

### 8.10.4. சமச்சீர் கால்நடை தீவன திட்டம் (Ration Balancing Programme)

தேசிய பால்வளத் திட்டத்தின் கீழ், சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, விழுப்புரம், வேலூார், திருச்சி மற்றும் மதுரை ஆகிய ஏழு ஒன்றியங்களில், 2014–15 முதல் 2016–17 வரையுள்ள மூன்று ஆண்டுகளில், ரூ.1467.60 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், சமச்சீர் கால்நடை தீவனத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



இத்திட்டம் செயல்படுத்துவதன் மூலம் நவீன விஞ்ஞான உத்திகளை கையாண்டு, கால்நடைத் தீவன செலவை குறைத்து, பால் உற்பத்தியை அதிகரிக்க வழிவகை செய்யப்படுகிறது.

### 8.11. ஒருங்கிணைந்த பால்பண்ணை மேலாண்மை அமைப்பு (IDMS)

பால் உற்பத்தியாளர்கள், நுகர்வோர் மற்றும் பொருள் வழங்குபவர்களுக்கு குறித்த நேரத்தில் சேவை வழங்குவதை உறுதிபடுத்துவதற்கு மற்றும் செயல்பாட்டு திறன் மேம்படுத்துவதற்கு, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளை தகவல் தொழில் நுட்பம் மூலம் ஒருங்கிணைத்து இயக்கி 5 ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பணிகள் ரூபாய் 46.55 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக மத்திய அரசு ரூ.18.34 கோடியை 100 சதவிகிதம் மானியமாகவும், மீதமுள்ள ரூ.28.21 கோடியை இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் நிதியிலிருந்தும் செலவிடப்படும் .

முதல் கட்டமாக இத்திட்டம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சேலம், ஈரோடு, மதுரை மற்றும் தர்மபுரி மாவட்ட ஒன்றியங்களின் கீழ் இயங்கும் 4 சமன் படுத்தும் பால்பண்ணைகள் மற்றும் 2,800 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் செயல் படுத்தும் வேலை நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த M/s.பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் (பி.) லிட் ஆலோசகராகவும் மற்றும் M/s. சி எம் எஸ் கம்ப்யூட்டர்ஸ் லிட். கணினி ஒருங்கிணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டு மென்பொருள் தயாரிப்பு வேலைகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டம், மார்ச் 2017ல் முடிக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**9. பால் உற்பத்தியாளர்களுக்கான சிறப்பு சேவைகள்**

பால் உற்பத்தியாளர்களின் நலன் காப்பது பால் கூட்டுறவு சங்கங்களின் முக்கியமான நோக்கமாகும்.



**9.1. பால் கொள்முதல் விலை உயர்வு**

பால் உற்பத்தியாளர்களுக்கு கட்டுப்படியான விலை வழங்குவதை உறுதி செய்யும் வகையில், **அரசு பசும்பால் கொள்முதல் விலையினை லிட்டர் ஒன்றுக்கு ரூ.23/–லிருந்து ரூ.28/– ஆகவும், எருமைப்பால் கொள்முதல் விலையினை லிட்டர் ஒன்றுக்கு ரூ.31/– லிருந்து ரூ.35/– ஆகவும் 01.11.2014 முதல் உயர்த்தி வழங்கியுள்ளது.** இது ஒரு முறை வழங்கப்பட்ட அதிகபட்ச கொள்முதல் விலை உயர்வு ஆகும்.

இதன்படி, **கடந்த 5 ஆண்டுகளில் பசும் பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.10/–ம், எருமைப்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.9/–ம் கொள்முதல் விலை உயர்வு வழங்கப்பட்டுள்ளது.** இதன் விளைவாக, பால் உற்பத்தியாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1,100 கோடி கூடுதலாக வழங்கப்பட்டு வருகிறது.

**9.2. மானிய விலையில் கால்நடைத் தீவனம் மற்றும் தாது உப்புக்கலவை வழங்குதல்**

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தங்களது சொந்த நிதியிலிருந்து கால்நடைத் தீவனத்திற்கு

கிலோ ரூ.2/– முதல் ரூ.4/– வரை மானியமாகவும், தாது உப்புக் கலவைக்கு கிலோ ரூ.20/– முதல் ரூ.25/– வரை மானியமாகவும் வழங்கி வருகின்றன. கால்நடை தீவன மானியம் 13 மாவட்ட ஒன்றியங்களாலும் தாது உப்புக் கலவை மானியம் 8 மாவட்ட ஒன்றியங்களாலும் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த மானியம் வழங்கப்படுவதால் கால்நடை தீவனம் வழங்குவது கடந்த 5 ஆண்டுகளில் 12 மடங்காக உயர்ந்துள்ளது.

## 9.3. திருத்தியமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதி

பால் உற்பத்தியாளர்களின் விசுவாசத்தை அதிகரிக்கும் பொருட்டும், பால் உற்பத்தியாளர்கள் இடர்பாடுகளை சந்திக்கும் நேரங்களில் அவர்களுக்கு உதவிடும் வகையிலும் திருத்தி அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதி உருவாக்கப்பட்டது.

பால் உற்பத்தியாளர் உறுப்பினர் ஒருவர், தனது பால்பண பட்டுவாடா தொகையிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.1/– சந்தாவாக செலுத்தும் போது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஒன்றியம் மற்றும் சங்கம் அந்த உறுப்பினருக்கு மாதந்தோறும்



தலா 50 பைசாவை தங்களது பங்களிப்பாக இந்நிதியில் செலுத்தும்.

இந்நிதியின் பணப்பலன்களை பெறுவதற்கு, பால் ஊற்றும் உறுப்பினர் விபத்து ஏற்பட்ட நாளுக்கு முந்தைய நாளுடன் முடிந்த ஓராண்டு காலத்தில் 180 நாட்களில் 120 லிட்டர் பால் ஊற்றியிருக்க வேண்டும்.

**அட்டவணை –16 இந்நிதியில் வழங்கப்படும் பணப்பலன்**

| வ. எண் | நிதி உதவி | தொகை |
|---|---|---|
| 1 | விபத்தின் காரணமாக மரணமடைந்தால் | ரூ.1.75 இலட்சம் |
| 2 | விபத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட உடல் உறுப்புகள் இழந்தால் | ரூ.1.75 இலட்சம் |
| 3 | விபத்தில் ஏதாவது ஒரு உடல் உறுப்பு இழந்தால் | ரூ.75,000/– |
| 4(அ) | வரிசை எண். (1) அல்லது (2) அல்லது (3) ல் தெரிவிக்கப்பட்ட நிதி உதவியுடன் கூடுதலாக கல்வி உதவித்தொகை –21 வயதுக்குட்பட்ட இரண்டு குழந்தைகளுக்கு | ரூ.10,000/– |
| 4(ஆ) | வரிசை எண். (1) அல்லது (2) அல்லது (3) ல் தெரிவிக்கப்பட்ட நிதி உதவியுடன் கூடுதலாக திருமண உதவித்தொகை – திருமணம் செய்ய சட்டப்படி வயது தகுதியுடைய ஒரு பெண் குழந்தைக்கு | ரூ.10,000/– |

இந்த நிதியிலிருந்து ஜுலை 2016 முடிய 68 பயனாளிகளுக்கு ரூ.1.20 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 15.07.2015 அன்று துவக்கி வைக்கப்பட்டது.


### 9.4. பால் உற்பத்தியாளர்களுக்கு ஒன்றியங்களால் வழங்கப்படும் ஊக்கத்தொகை

மாவட்ட ஒன்றியங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதன் மூலம் தங்களது செலவினத்திற்கு மேல் ஈட்டும் உபரி வருமானத்தை பகிர்ந்து கொள்கின்றன.

குறிப்பிட்ட மாவட்ட ஒன்றியம் ஈட்டும் உபரி வருமானத்தை பொறுத்து இந்த ஊக்கத்தொகை பொதுவாக லிட்டர் ஒன்றுக்கு 60 பைசாவிலிருந்து ரூ.1.60 வரை வழங்கப்படுகிறது.

2006–11 ஆம் ஆண்டு காலத்தில் வழங்கப்பட்ட ரூ.30.22 கோடி தொகையை ஒப்பிடும் போது 2011–16ம் ஆண்டில் 3,48,019 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.157.22 கோடி ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.






### 9.5. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் போனஸ்

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் துணை விதிகளில் வழிவகை செய்யப்பட்டபடி, சங்கம் ஈட்டும் இலாபத்தில் 50% இலாபம் மீண்டும் பால் உற்பத்தியாளர் உறுப்பினர்களுக்கே மீள வழங்கப்படுகிறது. சங்கம் இலாபம் ஈட்டும் காலத்தில், பால் உற்பத்தியாளர் உறுப்பினர்களுக்கு, பங்கு மூலதனத்தில், ஈவுத்தொகையாகவும், ஆதரவு தள்ளுபடி தொகையாகவும் (patronage rebate) மற்றும் இலாபத்தில்

50% தொகை போனஸாகவும் அவர்கள் சங்கத்திற்கு வழங்கிய பாலின் மதிப்பிற்கேற்ப வழங்கப்படுகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் 1.20 இலட்சம் உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ரூ.69.16 கோடி போனஸ், ஈவுத்தொகை மற்றும் ஆதரவு தள்ளுபடி தொகை ஆகியவை வழங்கப்பட்டுள்ளது.

### 9.6. மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல் (BMC)

பாலின் ஆரம்ப தரத்தை நிலைப்படுத்தவும், காப்புத்திறனை நீட்டிக்கவும், பால் உற்பத்தியாளர்கள் எந்நேரத்திலும் பால் வழங்கவும் 2,000, 3,000 மற்றும் 5,000 லிட்டர் கொள்ளளவில் மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படுகின்றன.

கீழ்க்கண்ட அளவீடுகளில் மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப் படுகின்றன.

- சங்கத்தின் கொள்முதல் அல்லது அதன் தொகுப்பு சங்கங்களின் கூட்டு கொள்முதல் நாள் ஒன்றுக்கு சராசரியாக 2,000 லிட்டர் இருக்கவேண்டும்.



- தொகுப்பு சங்கங்கள் (Cluster Societies) அதிகபட்சம் 10 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் இருக்க வேண்டும்.
- சங்கத்தில் மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவ போதுமான இடவசதி / கட்டட வசதி இருக்க வேண்டும்.

இதுவரை 299 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன. இவைகளின் குளிரூட்டும் திறன் நாளொன்றுக்கு 13.04 இலட்சம் லிட்டர் ஆகும்.

### 10. பணியாளர் நலன்

- பொங்கல் பண்டிகையின் போது இணையம், ஒன்றியம் மற்றும் தொடக்க பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.
- தீபாவளி பண்டிகையின் போது இணையம், ஒன்றியம் மற்றும் தொடக்க பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.
- பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகை காலங்களில் இணையம், ஒன்றியம் மற்றும் தொடக்க பால் கூட்டுறவு சங்கப்

பணியாளர்களுக்கு அன்பளிப்பாக பால் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

- தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் நிவர்த்தி செய்தல்:- தணிக்கை தடை காரணமாக இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் பணிபுரிந்து ஓய்வுபெறும் பல பணியாளர்கள் தங்களது ஓய்வூதிய பலன்களை பெற இயலாத நிலை ஏற்படுகிறது.

  தணிக்கை மறு ஆய்வு (கணக்கு) குழு கூட்டங்கள் சீரான இடைவெளிகளில் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து பெரும்பாலான தணிக்கைத் தடைகளுக்கு முடிவு காணப்பட்டுள்ளன. இதனால், ஓய்வு பெற்ற பணியாளர்கள் தங்களது ஓய்வூதிய பலன்களை பெற முடிந்தது. மேலும், இதன்மூலம் மாவட்ட ஒன்றியங்களின் ஐந்தொகை பட்டியலில் (Balance sheet) சட்டபூர்வமற்ற நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்படுகின்றன.

- **2015–16** ஆம் ஆண்டில் பால்வளத்துறையில் **42** பணியாளர்களுக்கும், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் **172** பணியாளர்களுக்கும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தில் **74** பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.



- **2015–16** ஆம் ஆண்டில் நேரடி நியமன அடிப்படையில் பால்வளத்துறையில் **154** புதிய பணி நியமனங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் **243** புதிய பணி நியமனங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தில் **190** புதிய பணிநியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் **01.10.2015** முதல் மாதமொன்றுக்கு ரூ.**300/–** முதல் ரூ.**1000/–** வரை அவர்களது பணி மூப்புக்கேற்ப கூடுதல் பணப்பயன் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுறவுத்துறையின் செயலமைப்பை அடிப்படையாகக் கொண்டு நிர்வாக வசதிகளுக்காக இத்துறையின் அமைச்சுப் பணியின் கீழ் அனுமதிக்கப்பட்ட கண்காணிப்பாளர் மற்றும் உதவியாளர் பதவிகள் சார்நிலை பணியின் கீழான கூட்டுறவு சார்பதிவாளர் மற்றும் இளநிலை ஆய்வாளர் பதவிகளாக பதவி உருமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

**11. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை**

தமிழ்நாட்டில் மூன்றடுக்கு முறையில் செயல்பட்டு வரும் பால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டபூர்வ தணிக்கை மேற்கொள்வதற்கென்று பால் கூட்டுறவுத் தணிக்கைத்துறை **01–10–1987** முதல் தனித் துறையாக உருவாக்கப்பட்டு, கீழ்க்காணும் வகையிலான பால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பூர்வ தணிக்கைப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

- மாநில அளவில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்.
- மாவட்ட அளவில் 17 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்.
- தொடக்க பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்.

அரசாணை எண்.**20**, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, நாள் **27.01.2014**ல், தணிக்கைப் பணியினை மேற்கொள்ள இத்துறைக்கென கூட்டுறவுத் துறை மற்றும் கருவூலக் கணக்குத் துறையிலிருந்து **307** பணியிடங்களும், பால் கூட்டுறவு தணிக்கைத்துறையைச்



சார்ந்த **28** பணியிடங்களும் ஆக **335** பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாநில அளவிலான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் **2014–15** ஆம் ஆண்டுக்கான சட்டபூர்வ தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. **2015–16**ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு தணிக்கையும் மேற்கொள்ளப்பட்டு தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. இணையத்தின் **2015–16**ம் நிதியாண்டிற்கான தணிக்கை தற்போது நடைபெற்று வருகிறது.

அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் **2014–15**ஆம் ஆண்டிற்கான சட்டப்பூர்வ தணிக்கை நிறைவு செய்யப்பட்டு தணிக்கைச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும், முதன் முறையாக **2015–16**ஆம் ஆண்டிற்கு முதல் அரையாண்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தணிக்கைச் சான்றுகள் வழங்கப் பட்டுள்ளன.

2015–16ஆம் ஆண்டிற்கான சட்டப்பூர்வ தணிக்கை புதுக்கோட்டை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் மேற்கொள்ளப்பட்டு 29.4.2016 அன்று தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. இதர மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில், 2015–16ஆம் ஆண்டிற்கான சட்டபூர்வ தணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2014–15ஆம் ஆண்டிற்கான தணிக்கை, தகுதியுள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திலும் நிறைவு செய்யப்பட்டு தணிக்கைச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. 30.06.2016 வரை 1,137 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் 2015–16ஆம் ஆண்டிற்கான தணிக்கைப்பணி மேற்கொள்ளப்பட்டு தணிக்கைச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.



**தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதிக்கட்டணம்**

பால் கூட்டுறவுச் சங்கங்களில் சட்டபூர்வ தணிக்கை மேற்கொண்டதற்காக 1.4.2015 முதல் 31.3.2016 வரையுள்ள காலத்திற்கு, தணிக்கைக் கட்டணமாக ரூ. 66.08 இலட்சம் பெறப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

அடிப்படை விதி 127ன் கீழ், பால் கூட்டுறவுச் சங்கங்களில் தொடர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டதற்காக, அடிப்படை விதி கட்டணமாக ரூ. 83.42 இலட்சம் பெறப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**தணிக்கை மறு ஆய்வு (கணக்கு) குழுக்கூட்டம்**

தணிக்கைக் குறைகள் நிவர்த்தி செய்வதை கண்காணிக்கவும், நிவர்த்தியினை ஏற்பளிக்கவும் தணிக்கை மறு ஆய்வுக்குழுக் கூட்டங்கள் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. 2015–16ம் ஆண்டில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் 180 தணிக்கைக் குறைகள் மற்றும் தொடக்க உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர்

கூட்டுறவுச் சங்கங்களில் 1,808 தணிக்கைக் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**12. முடிவுரை**

இலட்சக்கணக்கான பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோரின் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆவின் விளங்குகிறது. தமிழ்நாட்டின் 12,000–க்கும் அதிகமான கிராமங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் வருடம் முழுவதும் ஒரே சீரான வருமானத்தை வழங்குகிற பாலினை ஊற்றுவதற்காக தினசரி 2 முறை பால் சேகரிப்பு மையத்திற்கு வந்து செல்கிறார்கள். ஏராளமான கிராமப்புற குடும்பங்களுக்கு பால் பண்ணைத் தொழில் இரண்டாம்பட்ச மூலதன வருமானமாய் இருந்தாலும், சில குடும்பங்களுக்கு அதுவே முக்கிய வாழ்வாதாரமாயிருக்கிறது.

மாநிலத்தின் பால் பண்ணைத் தொழிலை வலுப்படுத்தி ஊக்குவிக்க வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் குறிக்கோளை எய்துவதற்காக, ஆவின், பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மூலம் நாள்தோறும் ரூ.10 கோடி



மதிப்பிற்கும் மேலாக பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்முதல் செய்து வருகிறது.

பெரும்பாலும், குடும்பத்தின் பெண் உறுப்பினர்களுக்கே பால் பணபட்டுவாடா செய்யப்படுவதால், அவர்களின் பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தை மேம்படுத்துவதற்கான வழிவகை செய்யப்படுகிறது. தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வரும் பால் உற்பத்திக்கான உட்கட்டமைப்பு வசதிகளின் மூலம், அவர்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய ஆவின் நிறுவனம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இலட்சக்கணக்கான நுகர்வோருக்கு சிறந்த சேவையை அளிக்கும் பொருட்டு, பதப்படுத்தும் வசதிகளை அதிகப்படுத்துதல், புதிய பால் பொருட்களை தயாரிப்பதற்கான வசதிகளை உருவாக்குதல் மற்றும் விற்பனை விநியோக முறையை விரிவுபடுத்துதல் போன்றவைகளுக்காக ஆவின் நிறுவனம் பெரும் முதலீடு செய்து வருகிறது. ஆவினின் சொந்த நிதியின் மூலம் சில முன்னேற்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும், கடந்த 5 ஆண்டுகளில், தற்போது உள்ள உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கு மட்டுமின்றி, விரிவாக்கப் பணிகளுக்கும், முற்றிலும் புதிய பசுமை

திட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசு மிக அதிக அளவில் நிதி ஆதரவு அளித்துள்ளது. தமிழக அரசின் முக்கிய ஆதரவின் காரணமாக, நியாயமான விலையில் பால் நுகர்வோருக்கு சிறந்த தரமான பொருட்கள் பரவலான வகையில் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் நுகர்வோருக்கு மேன்மேலும் சிறந்த சேவை அளிப்பதற்கு, பால்வளத்துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதன் மூலம், தமிழ்நாடு பால்வளத்துறை, புதிய சிகரங்களை எட்டுவது உறுதிபடுத்தப்படும்.

**எஸ்.பி.சண்முகநாதன்**
பால் மற்றும் பால்பண்ணை
மேம்பாட்டுத்துறை
அமைச்சர்



**பால் கூட்டுறவுகள் குறித்த மேலோட்ட பார்வை**

| வ. எண் | பொருள் | |
|---|---|---|
| 1 | தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை | 12,105 |
| 2 | 2015–2016ல் துவங்கப்பட்ட பால் கூட்டுறவு சங்கங்கள் (எண்ணில்) | 266 |
| 3 | தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 23.01 |
| 4 | பால் வழங்கும் உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 4.60 |
| 5 | சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) (இலட்சம் லிட்டரில்) | 31 முதல் 36 |
| 6 | மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 7 | மாநில அளவிலான இணையம் | 1 |
| 8 | ஒன்றியங்களில் பால் கொள்முதல் ( நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 26 முதல் 31 |
| 9 | சென்னை மாநகரில் பால் விற்பனை ( நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 11.22 |
| 10 | மாவட்ட ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 9.29 |
| 11 | ஒன்றிய பால்பண்ணைகளின் எண்ணிக்கை | 17 |

| | | |
|---|---|---|
| 12 | இணையத்தின் பால்பண்ணைகள் எண்ணிக்கை | 5 |
| 13 | ஒன்றியங்களின் பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 24.07 |
| 14 | இணையத்தின் பால்பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்) | 13.75 |
| 15 | பால் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 35 |
| 16 | குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில் ) | 14.75 |
| 17 | மொத்த பால் குளிர்விப்பான்கள் எண்ணிக்கை | 299 |
| 18 | மொத்த பால் குளிர்விப்பான்கள் குளிர்விக்கும் திறன் ( நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில் ) | 13.04 |
| 19 | கிராம பால் கொள்முதல் வழித்தடங்கள் எண்ணிக்கை | 530 |
| 20 | மாவட்ட ஒன்றிய அளவிலான பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 266 |
| 21 | சென்னை மாநகர பால் வினியோக வழித்தடங்கள் எண்ணிக்கை | 119 |
| 22 | பால் பவுடர் பண்ணைகளின் எண்ணிக்கை ( ஈரோடு, சேலம், மதுரை தருமபுரி மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையம்) | 5 |
| 23 | பால்பவுடர் உற்பத்தித்திறன் (மெ.டன்/ நாள்) | 90 |
| 24 | வெண்ணெய் சேமிக்கும் திறன்( மெ.டன்) | 2,834 |